தமிழ்ப் பொழில்

தஞ்சைக் கரந்தைத் தமிழ்ச் சங்கத் திங்கள் வெளியீடு

துணர்	திருவள்ளுவர் யாண்டு ௲௯௱௯௨	மலர்
	பிலவ, ஆடி.	
௩௭	1961 ஜூலை, ஆகஸ்ட்.	௪

திருக்குறள் மொழியமைப்பு

தி. நா. அறிவு ஒளி

வாழ்க்கை என்ற பேராசிரியன் மிக நுண்மையாக மக்களுக்கு நல்ல அறிவுரைகளை வழங்குகிறான். வாழ்க்கையில் ஒரு வேலையை நாம் செய்கிறோமென்றால்; அவ்வினைக்காக நாம் செலவிடும் ஆற்றல், உழைப்பு. ஆர்வம், முயற்சி ஆகியவை மிகுதியாக உள்ளன. அவ்வுழைப்பால் நாம் அடைந்த பயன் ஆக்கம், உழைப்பின் அளவை விடச் சற்று குறைந்தே அமைந்திருக்கும்.

நாம் பிறப்பதற்கு முன்,—தாயின் கருவகத்தில் ஐயிரண்டு திங்களாக உருவாக்கப்படும்போது ; தாய் துய்த்த அடைவுகள், விளக்க முடியாத நுண்ணிய-ஒள்ளிய உழைப்புகள், தனித்த துயரங்கள், நோய், காலச் செலவு ,பொருட் செலவு ஆகியவற்றை எண்ணினால் நெஞ்சம் எவ்வளவு உருகுகிறது ! எவ்வளவு குழைகிறது ! அத்தாய்மை முயற்சியைவிட அரிய பெரிய முயற்சியும் உண்டுகொல் ? இதனாலன்றோ முற்றும் துறந்த பற்றில்லாத்துறவியான பட்டினத்தடிகளாரும் தாய்ப் பாசத்தைத் துறக்க முடியாதவராகி, ' முன்னித்தவங்கிடந்து முந்நூறு நாட் சுமந்து ஈன்று புறந்தந்த அன்னையை எப் பிறப்பில் காண்பேன் இனி ?' என உளம் நொந்து, உணர்வுருகிப் பாடினார்!

தாய்மை ஒப்பற்ற உழைப்புக்கு ஓர் அரிய சான்று; அத் தாய்மை உணர்த்தும் மெய்யறம் இது," ஒரு வாழ்வே பிறிதொரு வாழ்வைப் படைக்கிறது?"

எரியும் விளக்குதானே இன்னொரு விளக்கை ஒளிரச் செய்கிறது, ஒரு குழந்தையை அடைவதற்காக ஓர் ஆண்ட

கையும், ஓர் பெண் மகளும் இளமையிலிருந்தே முயல்கின்றனர். பால் உணர்ச்சிக்கு ஆட்படுகின்றனர்; காதல் புரிகின்றனர். காமக்கலவி நிகழ்த்துகின்றனர், இல்லறத்தின் இனிப்பாகக் கருவுயிர்க்கிருள் தலைவி தன்னுயிரை ஈடாக்கி இன்னெரு தனி உயிரை ஈன்றளிக்கிருள். உலகம் வாழ்கிறது; வளர்கிறது......

இதே அமைப்பில் உலகப் படைப்புக்கள் யாவும் அமைந்துள்ள நுண்மை எண்ணத் தகுந்ததாம். இவ்வுண்மையை உணர்ந்த பின் நந்தமிழ் மேதை, ஞாலச்சான்ருேர் திருவள்ளுவனர் தம் ஒப்பில் உலக நூலான திருக்குறளைப் படைப்பதற்கு முன்னர் பட்ட பாடுகளையும், உற்ற அடைவுகளையும், துய்த்த உணர்வுகளையும், எண்ணிய எண்ணக் கோவைகளையும், கற்ற கல்வியையும், பிற வாழ்வுணர்வு-அறிவியல்-பயிற்சிகள், ஆகியவை பற்றியும் எண்ணிப்பார்த்தால் நாம் வியப்புக் கடலிலாழ்வோம்.

உணவு சமைக்கும்பொழுது மிகுதி, உண்ணும் காலம் குறைவு, இதனாலன்ருே வள்ளுவர், "செயற்கரிய செய்வார் பெரியர்" எனவும், "சொல்லுதல் யார்க்கும் எளிய, அரியவாம் சொல்லியவண்ணம் செயல்" எனவும், "பெருமை முயற்சி தரும்", எனவும், "முயற்சிதான் மெய்வருத்தக் கூலி தரும்" எனவுமெல்லாம் செயலருமை பெருமையைப் பலப்படப் பாராட்டுவர்.

இத்தகு அரிய உழைப்பில்-முயற்சியில்-மலர்ந்த திருக்குறளை சிறு பொழுதிற்குள் படித்து முடித்து விடுகிருேம். ஆனல், அந்தத் திருக்குறளோ, வள்ளுவரின் வாழ்க்கையில் அவர், அறிவுத்துறையில் முன்னேறுவதற்கு எத்துணை பாடுபட்டு முயன்றிருப்பார் என்பதைத் தெளிவாக்கும்.

வள்ளுவர் பல துறைகளிலும் இளமை முதலே ஈடுபட்டு நல்லறிவு பெற்றவர் என்பதைக் குறட்பாக்கள் விளக்குகின்றன.

இசைக் கலையில் வள்ளுவர் சீரிய வல்லுநர் என்பதை,

"குழலினிது யாழ் இனிது என்ப-தம் மக்கள்
மழலைச்சொல் கேளா தவர்" (66)

"பண் என்னும் பாடற்கு இயைபின்றேல் கண் என்னும்
கண்ணேட்டம் இல்லாத கண்" (573)

"கணை கொடிது யாழ்கோடு செவ்விது ஆங்கு அன்ன
வினை படு பாலால் கொளல்" (279)

எனுங் குறளுரைகள் தெளிவாக்கும். கட்டிடக் கலைத்திறன் தேர்ந்தவர் அவர் என்பதை,

"உயர்வு அகலம் திண்மை அருமை இந்நான்கின்
அமைவு அரண் என்றுரைக்கும் நூல்" (743)

என்ற குறட்பா மெய்ப்பிக்கிறது. யானைகளைக் காட்டில் பிடித்துப், பழக்குதல் ஆகிய 'யானைப்பாகன்' தொழில் பற்றிய அறிவுடையவர் வள்ளுவர் என்பதை,

"வினையால் வினையாக்கிக் கோடல் நனைகவுள்
யானையால் யானையாத் தற்று" (678)

என்ற பாவால் அறியலாம். பொற்கொல்லத் தொழில் பற்றிய அறிவுடையவர் என்பதை,

"அரம்பொருத பொன்போலத் தேயும் உரம்பொருத
உட்பகை உற்ற குடி" (888)

என்ற பாவால் விளக்குவார். கூத்துத் தொழில் பற்றிய குறிப்பை,

"கூத்தாட்டு அவைக்குழாத் தற்றே பெருஞ்செல்வம்
போக்கும் அதுவிளிந் தற்று" (332)

என்ற குறளால் அறிகிறோம். சுண்ணச் சுதையால் வண்ணப் பாவையை உருவாக்கும் உருவமைகொல்லன் தொழிலில் வள்ளுவர் சுவையுடையவர் என்பதை,

"நுண்மாண் நுழைபுலம் இல்லான் எழில்நலம்
மண் மாண் புனைபாவை அற்று." (407)

என்ற குறளால் மெய்ப்பிப்பர். வள்ளுவர் மருத்துவத்துறை அறிஞர் என்பதை 'மருந்து' என்ற அதிகாரத்தினாலும், மேடைக்கலை மேதை என்பதை, 'அவையஞ்சாமை', 'அவையறிதல்', 'சொல்வன்மை' ஆய தலைப்புக்களுள்ளும், உழவுத் தொழில் வல்லவர் என்பதை 'உழவு'ப்பகுதியினாலும், போர்க்கலை, அரசியல், பொருளியல் துறை வல்லுநர் என்பதைப் பொருட்பாலின் பல பகுதிகளாலும், காதற்கலைப் புலவர் எனுமுண்மை காமத்துப்பாலின் முழுப்பகுதியினாலும் நாம் நனியுணர முடிகிறது. அம்மட்டோ? இன்னும் பலதுறைகளிலும் வள்ளுவரின் நுண்ணறிவு ஈடுபட்டு உழைத்துள்ளது.

இத்துணைத் துறைகளில் தெளிந்த அறிவும், தொழில் நுணுக்கப் பயிற்சியும் பெறுவது எளிய செயலன்று. மிக

நுண்ணிய ஆற்றல் படைத்த சீரிய மூளை வள்ளுவர்க்கமைந் திருந்தமையாற்றான் இத்துணைத் திறன்களைப் பெற்றிருந் தார்.

வள்ளுவரின் தாய்மொழிப் பயிற்சியின் திறனும் திட்பமும் வியக்கத்தக்கது. மொழியறிவு மட்டுமா பெற்றிருந்தார்? புலமையின் கொடுமுடியிலேயே பேராட்சி செய்தவராயிற்றே! தான் உணர்த்த எடுத்துக்கொண்ட பொருள்களுக்கு ஏற்ப நடையையும்; கருத்துக்களையும்; மொழியமைப்பையும் 'தனித் தன்மைவாய்ந்த முறையில்' அமைத்துக் கொண்டவர் அவர். இத் 'தனிமைத் தன்மை' கடினமான பலகால உழைப்பிற்குப் பின்னர் மட்டுமே 'கைகூடும்' திறமையாகும். அவ்வாறாயின் 'குறள் நூல்' போன்ற வெற்றிப் படைப்பினை' உருவாக்கக் குறளாசிரியர் எத்துணைக் காலம் இரவு பகலெனப் பாராது அறிவுலகில் உழைத்திருக்க வேண்டும்!

திருக்குறளின் மொழியமைப்பை ஆராய்ந்தால் பல அரிய உண்மைகள் புலனாகின்றன.

குறளின் மொழியமைப்பு தன்னை மறந்த நிலையிலிருந்து பிறந்ததன்று. தன்னையறிந்து தன்னை மறந்த நிலையில் மலர்ந்து அறிவொளி கால்வதாகும். உண்மையையும், ஓரளவு கற்பனையையும் சேர்த்து முறையே நிரல் செய்யப்பட்ட மொழியமைப்பு குறளுடையது.

பாட்டியற்றுவதில் பல துன்பங்கள் உண்டு.

கவிஞனின் அறிவுநிலை × படிப்போரின் உணர்வுநிலை— ஆகிய இரண்டும் ஒத்து நிலை பெறுமாறு யாப்பு செயற்பட்டுரு வாக வேண்டும். அப்போதுதான் புலவன் தான் உணர்த்த வந்த கருத்தைக் கற்பவன் உணரமுடியும்.

—இவ்வுண்மையை நன்குணர்ந்த தமிழ்மேதை திருவள் ளுவர். அதனால் தான் காலம் கடந்தும் மாறாத மொழியமைப் பைத் தந் நூலில் அவர் ஆண்டுவந்துள்ளார்.

பதிற்றுப் பத்தின் மொழியமைப்பும், நடையமைப்பும் கடுமை வாய்ந்திருப்பதைப்போல குறளின் மொழியமைப்போ நடைநலனோ அமைந்தில்லை. அதனைக் காட்டிலும் எளிமையும் இனிமையும், நயமும், மென்மையும் தனிச்சாயலும் வாய்ந்த தாக உள்ளது. இத்திறனே 'மொழியறிவு மேதைமை'க்குச் சீரிய சான்று!

"பாட்டை 'இப்படி' எழுத வேண்டும்... இன்ன சொல்லை இவ்வாறு ஆளவேண்டும்'...எனவெல்லாம் எண்ணிய பின்னர்

தான் புலவர்கள் பாட்டியற்றுகின்றனரா? இவ்வினவுக்கு விடைகாணத் துவங்கும் முன், 'அப்பாட்டு' எத்தகையது? 'என்ன பொருளைக் கொண்டது? என ஆராய வேண்டும்.

கவிஞரின் நிலை, உணர்வெழுச்சி, புலமையாற்றல்—பாட்டு உருவாகும் காலம், சூழ்நிலை—பாட்டின் பொருளாற்றல், கவிஞன் அறிவு தொழிற்படும் அளவு—கவிஞனின் உலகியல், இயற்கையியல், நூலறிவியல் ஆராய்ச்சியாற்றல்—புலமை மேதை—புதுமை ஆர்வம்—ஆகிய வற்றுக்கு ஏற்பவே பாட்டும் அதன் மொழியமைப்பும் அமையும்.

1. 'இன்ன கருத்தை அமைத்துப் பாட்டியற்ற வேண்டும்' எனச்சற்றும் எண்ணமைலே கூடப் புலவன் அரிய பாட்டை எழுதிவிடுவான். இது **'மேதைநிலை'**யில் தோன்றும் பாட்டு.

2. சில பொழுதுகளில், எண்ணி எண்ணி—முயன்று முயன்று—எழுத்தெழுத்தாய் கோத்தும் பாட்டியற்றுவான் கவிஞன். இது **'முயற்சி நிலை'** பாட்டு.

3. சிற்சில துய்ப்புக்களைத் துய்க்கும் போது, திடுமென் உணர்ச்சித் துடிப்பில் பொங்கும் உணர் வாற்றலோடு சில பாட்டுகள் மலரும். இது **'உணர்ச்சிநிலை'**ப் பாட்டு.

இம் மூன்று நிலைப் பாட்டுக்களுக்கும் தனித்தனி மொழி யமைப்பு உண்டு. வள்ளுவரின் 'வாழ்க்கையில்' இம் மூன்று நிலைப் பாட்டுக்களும் காணக்கிடைக்கின்றன.

காமத்துப்பால் பாட்டுக்களில் பல பாடல்கள் மேதை நிலைப்பாடல்களாக உள.

"காலை அரும்பிப் பகலெல்லாம் போதாகி
மாலை மலரும் இந் நோய்" (1227)

"வாழ்தல் உயிர்க்கன்னள் ஆயிழை சாதல்
அதற்கன்னள் நீங்கும் இடத்து" (1124)

"அனிச்சமும் அன்னத்தின் தூவியும் மாதர்
அடிக்கு நெருஞ்சிப் பழம்" (1120)

"அறிதொறும் அறியாமை கண்டற்றால் காமம்
செறிதொறும் சேயிழை மாட்டு" (1110)

"அணங்குகொல் ஆய்மயில் கொல்லோ கணங்குழை
மாதர் கொல் மாலும் என் நெஞ்சு" (1081)

என்ற பாடல்கள் 'மேதைநிலைப் பாடல்களுள் சிலவாகும்.

பொருட்பால், அறத்துப்பால் பகுதிகளில் பெரும் பான்மையான 'முயற்சி நிலைப் பாடல்களாம்.

"இயற்றலும் ஈட்டலும் காத்தலும் காத்த
வகுத்தலும் வல்ல(து) அரசு" (385)

"காதல காதல் அறியாமை உய்க்கிற்பின்
ஏதில ஏதிலார் நூல்" (440)

"தேரான் தெளிவும் தெளிந்தான்கண் ஐயுறவும்
தீரா இடும்பை தரும்" (510)

"நன்மையும் தீமையும் நாடி நலம் புரிந்த
தன்மையான் ஆளப் படும்" (511)

"எளிது என இல் இறப்பான் எய்தும் எஞ் ஞான்றும்
விளியாது நிற்கும் பழி" (145)

"அறிவினுள் எல்லாம் தலை என்ப தீய
செறுவார்க்கும் செய்யா விடல்" (202)

என்பன போன்ற குறட்பாக்கள் முயற்சிநிலையில் தோன்றியனவாகும்.

முப்பாலிலும் பல 'உணர்ச்சி நிலைப்பாக்கள்' காணப் படுகின்றன.

"பெண்ணிற் பெருந்தக்க யாவுள கற்புஎன்னும்
திண்மை உண்(டு) ஆகப் பெறின்" (54)

"ஈன்ற பொழுதிற் பெரிதுவக்கும் தன்மகனைச்
சான்றோன் எனக்கேட்ட தாய்" (69)

"அமிழ்தினும் ஆற்ற இனிதேதம் மக்கள்
சிறுகை அளாவிய கூழ்" (64)

"நெருநல் உளன் ஒருவன் இன்(று)இல்லை என்னும்
பெருமை உடைத்துஇவ் உலகு" (336)

"பேராண்மை என்ப தறுகண்ஒன்(று) உற்றக்கால்
ஊராண்மை மற்(று) அதன் எஃகு" (773)

"கைவேல் களிற்றொடு போக்கி வருபவன்
மெய்வேல் பறியா நகும்" (774)

"யான் நோக்குங் காலை நிலன்நோக்கும் நோக்காக்கால்
தான் நோக்கி மெல்ல நகும்" (1094)

"தம்இல் இருந்து தமது பாத்து உண்டற்றால்
அம்மா அரிவை முயக்கு" (1107)

"செல்லாமை உண்டேல் எனக்(கு) உரை மற்று, நின்
வல்வரவு வாழ்வார்க(கு) உரை." (1151)

"துன்பத்திற்(கு) யாரே துணை யாவார்? தாமுடைய
நெஞ்சம் துணைஅல் வழி (1299)

"ஊடுக மன்னோ ஒளி இழை யாம் இரப்ப
நீடுக மன்னோ இரா" (1329)

"உள்ளினும் தீராப் பெருமகிழ் செய்தலால்
கள்ளினும் காமம் இனிது" (1201)

"யாமும் உளேங்கொல் அவர்நெஞ்சத்து? எம்நெஞ்சத்து
ஓ! ஓ! உளரே அவர்!" (1204)

என இவை 'உணர்ச்சி நிலைப்பாக்களுள் சில. மொழியமைப் புச் சிறப்புக்காக வள்ளுவர் தனிக்கருத்தும் முயற்சியும் எடுத்துக்கொண்டிருக்கும் நுட்பத்தை இனைய 'ஆய்வு நோக்கால்' தாம் நனி தெளியலாம்.

குறட் புலவரின் பாக்களுள் சில வல்லினத்தாலும், சில மெல்லினத்தாலும், சில இடையினத்தாலும் நடைபெறுகின்றன. எழுத்தாட்சிகளில்கூட ஆசிரியர் எத்துணை ஆழ்ந்த கருத்தும் கவனமும் செலுத்தியிருக்கிறார் என்பதற்கு இஃதொன்றே தக்கசரி.

வல்லினக்குறட்பாக்கள் சில :

"துப்பார்க்குத் துப்பாய துப்பாக்கித் துப்பார்க்குத்
துப்பாய தூஉம் மழை" (12)

"பற்றுக பற்றற்றான் பற்றினை அப்பற்றைப்
பற்றுக பற்று விடற்கு" (350)

"தன் குற்றம் நீக்கிப் பிறர்குற்றம் காண்கிற்பின்
என்குற்ற மாகும் இறைக்கு" (436)

"கற்க கசடறக் கற்பவை கற்றபின்
நிற்க அதற்குத் தக" (391)

"கொக் கொக்க கூம்பும் பருவத்து மற்(று) அதன்
குத்தொக்க சீர்த்த இடத்து" (490)

"இடும்பைக்கு இடும்பை படுப்பர் இடும்பைக்கு
இடும்பை படாஅ தவர்" (623)

"மடுத்த வாயெல்லாம் பகடுஅன்னான் உற்ற
இடுக்கண் இடர்ப்பாடு உடைத்து" (624)

இடையினக் குறட்பாக்கள் :

"இயல்பினால் இவ்வாழ்க்கை வாழ்பவன் என்பான்
முயல்வாருள் எல்லாம் தலை" (47)

"தெய்வந் தொழாஅள் கொழுநன் தொழு(து) எழுவாள்
பெய் எனப் பெய்யும் மழை" (55)

மெல்லினக் குறட்பாக்கள் சில.

"எண்ணியார் எண்ணம் இழப்பர் இடன் அறிந்து
துன்னியார் துன்னிச் செயின்" (494)

"எண்ணிய எண்ணியாங்கு எய்துப எண்ணியார்
திண்ணியர் ஆகப் பெறின்" (666)

"நன்னீரை வாழி அனிச்சமே நின்னினும்
மென்னீரள் யாம்வீழ் பவள்" (1111)

"இன்மையின் இன்னாதது யாது? எனின், இன்மையின்
இன்மையே இன்னா தது." (1041)

"மன்னர்க்கு மன்னுதல் செங்கோன்மை அஃதின்றேல்
மன்னாவாம் மன்னர்க்(கு) ஒளி (556)

"யான்நோக்கும் காலை நிலன்நோக்கும் நோக்காக் கால்
தான் நோக்கி மெல்ல நகும்" (1094)

இவ்வாறு எழுத்தினப் பிரிவமையுமாறு வேண்டுமென்றே வள்ளுவர் பாட்டு இயற்றினரோ; இல்லையோ, யாம் அறியோம். வள்ளுவர் அறிந்தோ, அறியாமலோ அவர் மூளையில் மொழியின் நுண்ணிய அமைப்பு ஊறி யிருந்து; அம்மொழியுணர்வின் வெளிப்பாடாகக் குறளில் இத்தகு பாக்கள் அமைந்துவிட்டன.

ஒரு மொழியின் இலக்கணச்சிறப்பும், ஒலி நுட்பமும், இலக்கியமரபும், மொழிப்பண்பாடும் திண்ணமாக அம்மொழியின் கண் மலர்ந்த நல்ல இலக்கியத்தில் தக்க இடம் பெறுவது இயற்கை. அவ்வியல்பு குறளிலும் அமைந்துள்ளது.

வள்ளுவர் தாய்மொழிப்பற்றை இவ்வாறு நுண்ணுருவாக நூல் முழுதும் புதையல் போலப் புதைத்து வைத்துள்ளார். அவருடைய மேதை யாற்றலின் மேன்மை நுட்பம் ஓர்ந்து குறளைக் கற்றால் 'தாய்மொழிக் காதலை' எந்த அளவு வள்ளுவர் போற்றிப் பேணியுள்ளார் என்ற வாய்மையைச் சால அறியலாம்.

குறளின் மொழியமைப்பு எளிமையின் எல்லையைத் தொட்டது. அதே பொழுதில் இலக்கண வழுவற்றது. இலக்கணத்தைப் புறக்கணிக்காத, மீறாத. வெறுக்காத நடையும், மொழியமைப்பும், பொருளாழமும்தான் சீரிய இலக்கியத்தை உருவாக்க உதவும். இந்நுட்ப ஒட்பம் உணராதார் இலக்கணத்தைப் பகைத்து முரணி 'எழுத்துக்களை' உருவாக்க முனைந்து தாமும் இடர்ப்பட்டு, மொழி வளர்ச்சிக்கு இடையூறு விளைத்து வறிதே சோர்வர். அதகு ஆய்வறிவிலார்க்கு வள்ளுவர் தன் நுண்மாண் நுழைபுல நன் மொழியமைப்பால் விடுக்கும் மறைச் செய்தி இதுவே: 'மொழிமரபு, இலக்கிய மரபு, புலமை நெறி, இலக்கண முறை, பண்பு வரையறை, நாட்டியல்பு, நாகரிகம், மொழிக் கற்பு ஆகியவைகளை அணுவளவும் பிழைக்காது நூல் இயற்றி மொழியாக்கம் பேணல் வேண்டும்.'

கருத்தைச் சிறப்பாக வெளியிட வேண்டுமாயின் தெளிந்த மொழியமைப்பே வேண்டும். இதனை வள்ளுவரே நன்கு

வலியுறுத்தியுள்ளார் 'திருக்குறளில். "கேட்டார்ப்பிணிக்குந் தகைய வாய்த், திறன் அறிந்து, பிறிதொரு சொல் நம் சொல்லை வெல்ல முடியாத அத்தகு ஆற்றல் மிக்க சொல்லை ஆண்டு எழுத (பேச) வேண்டும். எனக் குறள் மேதை குறிப்பது உளங் கொளத்தக்க கருத்தாகும்.

கலைப் படைப்புக்கள் உருவாகும் போது பலவகைத் துய்ப்புகள், அடைவுகள், வாழ்வுணர்வுகள் உண்டாகின்றன. சுவைஞர் உணரவியலாத ஒள்ளிய உணர்வுகளையும், தன்மைகளையும், நிலைகளையும் தம் ஆக்க முயற்சியால் அக்கலைஞர் அடைகின்றனர்,

இதுவே கலைஞருக்கும் சுவைஞருக்கும் அமையும் குறிப்பிடத்தக்க வியன்பெரும் வேற்றுமையாகும். கலைஞர்கள் தம் உள்ளத்தில் உணரும் அத்தனை உணர்சிகளையும் தம் கலைப் படைப்புக்களில் உருவாக்கிக் காட்டுவதில்லை. தம் அறிவாற்றலில் அரைப் பகுதியையோ, கால் பகுதியையோ தான் வெளியிட முடிகிறது. அதாஅன்றி அவர்கள் நுண்ணுணர்வால் துய்க்கும் நுண்ணுற்றல் ஒண்மையும் விழுப்பமும் வாய்ந்தது. பருமை முயற்சியான படைப்பில் சற்று குறைபாடு அமையத் தான் அமையும்!

இவ்வுண்மைகளை உள்ளத்தில் பதிய வைத்துக்கொண்டு திருக்குறளை ஆராயும் போது; வள்ளுவர் தம் உள்ளத்தில் உணர்ந்த — எண்ணிய — கொண்ட உணர்ச்சிகளையும், எண்ணங்களையும், கருத்துக்களையும், அரிய அறிவுண்மைகளையும் ஓரளவே படைத்தளித்துள்ளார் என்றும், முற்றும் அளிக்கப் பெறவில்லை என்றும், உணரலாம். வள்ளுவரின் மேதை—புலமை—கடலளவு எனின், திருக்குறள் ஒரு சில நீர்த்துளி அளவே உடையது என்பதை அறிய வேண்டும்.

இந்த நுட்பத்தை நன்கு தெளிய வேண்டுமெனில், 'அவர் நூலகத்துள் பொலியும் 'சிறப்பு முரண்கள்' சிலவற்றை ஓர்ந்தாராய வேண்டும்.

நன்மையைப் போற்றிய வள்ளுவர் 'தீமையும் வாழ்க்கைக்கு வேண்டும்' என குறிப்பர், இத்தீமை **'இன்றியமையாத் தீமை'** எனப்படும்.

"ஈர்ங்கை விதிரார் கயவர் கொடி(று) உடைக்கும்
கூன்கையர் அல்லா தவர்க்கு. (1077)

"பொய்மையும் வாய்மை இடத்த புரைதீர்ந்த
நன்மை பயக்கும் எனின்" (292)

"இளைதாக முள்மரம் கொல்க களையுநர்
கைகொல்லும் காழ்த்த இடத்து" (879)

கண்ணகியின் மணம் காதல் மணம்?

K. S. மகாதேவன், M.A., B.Sc.

கண்ணகியின் மண முறை பூம்புகாரில் நில்விய பண்பாட்டுக் குழப்பத்தை நன்கு சுட்டுகின்றது என்பதில் யாருக்கும் கருத்து மாறுபாடு இருக்கமுடியாது. ஆயினும், மணத்திற்கு இன்றியமையாது வேண்டப்படுகின்ற காதல் பிணிப்பாவது மணமக்களிடையே இருந்ததா என்பது இன்று ஆராய்ச்சிக்குரிய செய்தியாக இருக்கின்றது. மணத்திற்கு முன்னர் கண்ணகியைக் கண்டு 'அணங்குகொல் ஆய்மயில் கொல்லோ' என்று கோவலன் மயங்கியதாகவோ, கோவலனை மனத்துள் வைத்து 'வேபாக்கறிந்து, வெய்துண்டல் அஞ்சிக் கண்ணகி மெலிந்ததாகவோ சிலப்பதிகாரத்தில் செய்தி இல்லை. இருவருக்கும் இடையில் இருந்தனவாக நாம் அறியும் பொருத்தமெல்லாம், இளையவர்கள், எழிலுடையவர்கள், எல்லையற்ற செல்வம் படைத்த குடும்பத்திலே வந்தவர்கள் என்பனவேயாம். இன்னும் பூம்புகார் மேற்கொண்ட புது வழியின்படி பார்த்தால் இருவரும் ஒரே வருணத்தைச் சேர்ந்தவர்கள்! இந்த அடிப்படையில் தான் இருவரது பெற்றோரும் இவர்களைக் கணவன் மனைவியாகக் காண விழைந்தனர். அவ்வளவில், மாமுது பார்ப்பான் மறைவழி காட்டிட, மணமக்கள் தீவலம் செய்யத் திருமணம் முடிந்தது.

என்பனபோலும் அமைத்த குறள்கள் தவறானவையோ, உண்மையான முரண் கருத்தினவோ, அன்று நடைமுறை உண்மைக் கருத்துக்களை அஞ்சாது வெளியிடும் தமிழ் மேதையின் புலமை வியத்தற்குரியது. இனைய கருத்து வளத்தைத் தெளிவாக உணர்த்தும் **இயற்கை மொழியமைப்பே** வள்ளுவர் மொழிப் புலமையின் தனிச்சீர்மை.

இனைய பாடுகள் பலபட்டு இயற்றி ஓர் அரும் பெரும் அறிவமிழ்தக் கருவூலமான திருக்குறளினை நாம் உண்மையில் காதல் மிக்கெழக் கசிந்துருகிக் கற்கிறோமா? கற்ற வாற்றான் வாழ்வில் கடைப்பிடித் தொழுகுகிறோமா? நாமே நடுநிலைத் தீர்ப்பு வழங்கினானும் 'தலைநிமிர' முடியாத நிலையில் தானே நிற்போம்!

முயற்சிக்கொரு விளைவாகக் கனிந்த குறளை முயற்சியோடு கற்று, ஊன்றி ஆழ்ந்துணர்ந்து, உண்மையான ஒழுக்கமாகக் கடைபிடிக்கத் தமிழ்த்திரு மக்கள் அனைவரும் முயல்வோமாக!

இளங்கோ களவினை வெறுக்கின்றார்?

சிலப்பதிகாரத்தில் வரும் இத்திருமணத்தை அடியாகக் கொண்டு திரு. இரா. இராகவையங்கார் போன்றவர்கள் இளங்கோவடிகளாருக்கு களவு வழி வரும் மணம் உடன்பாடன்று என்று முடிவு செய்கின்றனர். இதனைக், "குன்றக்குரவையுட் களவொழுக்கத்துக்குரிய வெறியாடல் முதலியவற்றையும் கூறிக்காட்டிய இளங்கோவடிகள் தாம் எடுத்துக் கொண்ட கதைக்குத் தலைவியும், தொழுத்தகு கற்புடையாட்டியும் அருந்தவத் தமிழ்ப் பெண்ணணங்கும் ஆகிய கண்ணகியார் திருமணத்தைக் களவே இல்லாத கற்பின்வைத்து" (தமிழ் வரலாறு பக்கம் 106—இரா. இராகவையங்கார்) முடித்திருக்கின்றார் என்று எழுதுவதால் அறியலாம். இக்கருத்தை வலியுறுத்த இவர்கள் களவு மணம் தவறான ஒருமணம் என்று இளங்கோவடிகளாரே கூறுவதாகத்

"துறைமிசை நினதிரு திருவடி தொடுநர்
பெறுக நன் மணம் விடு பிழைமன மெனவே"

(குன்றக்: 18)

என்ற பகுதியை எடுத்துக்காட்டிக் களவுமணமே இங்குப் 'பிழைமணம்' என்று பேசப்படுகின்றது என்று கூறுவர்.

பொருள் மொழிப் புலவரும்! வாய் மொழிப் புலவரும்!

பழந்தமிழர் கடவுள் நெறியாகப் போற்றிய களவு நெறியின் பெருமையை மறைவழி நிற்போரால் உணர்ந்து கொள்ள முடியாது என்பது நெடுங்காலமாகவே தண்டமிழ் ஆய்வந்த பொருள் மொழிப்புலவர்கள் கண்டறிந்த ஓர் உண்மையாகும்! களவு நெறியின் பெருமையை அறியாதவர்க்கு அறிவுறுத்தவே கபிலர் குறிஞ்சிப்பாட்டுப் பாடினர் என்ற செய்தியும் நாம் அறிவோம். ஆயினும் எதிர்பார்த்த அளவிற்குப் பலன் கிட்டியதாகத் தெரியவில்லை! இந்த நிலையில் 'சிறந்தது காதற் காமம்' என்பதனை வலியுறுத்த மீண்டும் ஒரு புலவர் அவர்களை நோக்கி

"நான் மறை விரித்து நல்லிசை விளக்கும்
வாய் மொழிப் புலவீர்!..." [பரிபாடல்: 9—12,131]

என்று விளித்துப் பொருள் மொழி பேசுவது கவுந்தியடிகள்

"நலம்புரி கொள்கை நான் மறையாள! (காடு காண் :152)

என்று விளிப்பது போன்றதொரு நகைச்சுவையைத் தந்து நிற்கின்றது! எனவே, 'வாய் மொழிப் புலவர்கள்' 'பிழை மணம்' என்ற அகத்திணைக்குரிய சொல்லின் பொருள் மொழி'யை உணர்ந்து கொள்ளத் தவறியதில் வியப்பதற்கு ஒன்றுமில்லை! தலைவியின் உள்ளத்

தில் தலைவன் இடம் பெற்றுவிட்டதை அறியாத பெற்றோர், வேறு ஒருவனுக்கு அவளை மணம் பேச முற்பட்டால், பெற்றோர் பேசும் அந்த மணத்திற்குத்தான் 'பிழை மணம்' என்று பெயர்வைத்து அகத்துறை இலக்கியங்கள் அழைக்கும். அதுவே 'அயல் மணம்' என்றும் சொல்லப்படும். எனவே குமரனை வழிபடும் குறிஞ்சிப் பெண்கள் பெற்றோர் பேசும் பிழைமணம் ஒழியவும் களவுவழிக் கலந்த தலைவனொடு நிகழும் 'நன் மணம்' நிறைவேறவுமே, "பெறுக நன் மணம் விடு பிழை மணமெனவே" என்று வேண்டுகின்றனர். இக்கருத்தினையே இன்னும் தெளிவாக

"அயல்மணம் ஒழி, அருள் அவர் மணம்"

(குன்றக்: 16)

என்ற அடியில் இளங்கோ வெளியிடுகின்றார். இங்கு 'அயல் மணம்' என்பதற்குப் 'பிரசாபத்தியம்' என்றும் 'அவர்' என்பதற்குத் 'தலைவன்' என்றும் அரும்பத உரை இருந்தும் கூடப் 'பிழை மணம்' என்பதற்குக் 'களவு மணம்' என்று பொருள் காண எப்படித்தான் 'வாய் மொழிப்புலவர்கள்' துணிந்தனரோ? யாம் அறியோம்! களவு மணத்தை இளங்கோ வெறுப்பாராகில், களவியல் இலக்கியங்களைப் பிழிந்து கானல் வரி பாடியிருக்க மாட்டார்!

கண்ணகி மணம் களவு மணம்?

கண்ணகியின் மணம் களவு வழிப்பட்ட காதல் திருமணம் என்று கொள்வோரும் உண்டு. ஆனால், மணத்திற்கு முந்திய நிகழ்ச்சிகளாக அடிகளார் ஒன்றும் கூறாது போனதால், இவர்கள் சொல்லாராய்ச்சியையே துணையாகக் கொள்ள வேண்டியிருக்கின்றது. மணமக்களை அறிமுகப் படுத்தும் போது, அடிகளார் காதல், கிழமை, ஆயம் போன்ற அகத்திணையில் வழங்கும் சொற்களை ஆளுதலையும் மணத்திற்கு முன்னரே மணமகளின் 'தீதிலாத்திறம்' பற்றிக் குறிப்பிடுவதனையும் மனத்துட்கொண்டு இத்திருமணம் களவின் வழி வந்த காதல் திருமணமே என முடிவு செய்வர். ஆனாலும். இங்கு நாம் ஆராய வேண்டியது ஒன்று உண்டு. மேலே காட்டிய சொற்களை இளங்கோவடிகளார் அகத்திணைக்கே உரிய சிறப்புப் பொருளில் எடுத்தாண்டிருக்கின்றனரா, அல்லது பொதுப் பொருளிலே வழங்கியிருக்கின்றாரா என்பதே அது.

காதல்

காதல் என்ற சொல்லைப் 'பெருங்குணத்துக் காதலாள்' என்ற தொடரில் கண்ணகியை அறிமுகப் படுத்துவதற்கு (மங்கல: 28-29) அடிகளார் எடுத்தாளுகின்றார். "கண்ணகி ஏனைய எளிய பெண்களைப் போலச் சூழ்நிலையின் எதிர்ப்பைக்

கண்டு சோர்ந்து விடுபவள் அல்லள்; அதனை எதிர்த்து வெற்றிகாண்பவள்" என்பதனைத் தோற்றுவாய் செய்யவே இளங்கோ வடிகளார் 'வயங்கிய பெருங் குணத்துக் காதலாள்' என்று கூறுகின்றார். கண்ணகியின் இந்தப் 'பெருங்குணத்துக் காதல்'தான் குளங்கண்ட இடத்தில் மூழ்கிக் கோவில் கண்ட இடத்தில் கும்பிடும் தேவந்தியின் திட்டத்தைப் 'பீடன்று' என்று விலக்கச் செய்தது; 'மடம்படு சாயலாள் மாதவிதன்னையும் கடம்படாளாக' வாழச் செய்தது; 'இலம்பாடு நாணுத்தரும் எனக்கு' என்ற கோவலனிடம் 'நலங்கேழ் முறுவல் நகை முகம் காட்டிச் சிலம்புள கொண்மென'ச் செப்பச் செய்தது; 'மாற்ரு உள்ள' வாழ்க்கையளாகிக் கோவலன் 'எழுக' என்றதும் எழச் செய்தது; 'நடுங்கு துயர் எய்தி நாப்புலரவாடிய' நிலையிலும் 'தன் துயர்காணுத் தகைசால் பூங்கொடி' யாகத் திகழச் செய்தது. இறுதியில் ஏனைய மகளிர் போன்று 'அற்புக்கடன் நில்லாது, நற்றவம் படராது, கற்புக்கடன் பூண்டு' (மணிமேகலை: வஞ்சிமாநகர்புக்க.) தன்கடன் முடிக்கச் செய்தது, கதையில் வரும் கண்ணகியின் இவ்வளவு அருஞ்செயல் கட்கும் தோற்றுவாயாக எடுத்தாலும் 'பெருங்குணத்துக் காதலாள்' என்ற தொடரின் ஆழம் எவர்க்கும் எல்லை காண முடியாததாக இருக்கின்றது. கண்ணகி பெருங் குணங் களைக் காதலிக்கின்ருள் என்று சொன்னல் கூடப்போதாது. பெருங்குணங்கள் தாம் கண்ணகியைத் தேடிவந்து காதலிக் கின்றன! இந்தப் பொருள் நுட்பத்தினையே 'பெருங் குணங்களைக் காதலிப்பாள்' என்று அடியார்க்கு நல்லாரும், 'பெருங்குணத்தால் காதலித்தவள்' என்று அரும்பத உரை காரரும் கூறும் பொழுது காண்கின்ரேம்! இங்குக் 'காதலித் தவள்' என்பதற்குக் 'காதலிக்கப் பட்டவள்' என்பதே பொருள். செயப்பாட்டு வினையைச் செய்வினைபோலப், பானை உடைக்கப்பட்டது (the pot is broken) என்னது பானை உடைந்தது என்று சொல்லும் தமிழ் மரபினை ஒட்டியே 'பெருங்குணத்தால் காதலித்தவள்' என்று அரும்பத உரைகாரர் கூறுகின்ருர். இங்குக் கண்ணகியே செயப்படு பொருள்; வேறு செயப்படு பொருள் தேடிக் கோவலனைக் கொண்டு வந்து நிறுத்திப் 'பெருங்குணத்தால் கோவலனைக் காதலித்தாள்' என்று கொள்வது 'பெருங் குணத்துக் காதலாள்' என்ற தொடரின் பொருளாழத்தைக் குறைப்பதாகவே முடியும். மேலும், கோவலனைக் காதலித் தாள்' என்பது இளங்கோ கருதியதாக இருந்தால் கோவலனை அறிமுகப்படுத்தும் போதும் 'பெருங்குணத்துக் காதலான்' என்று கூறி அவன் கண்ணகியைக் காதலித்த செய்தியையும் நமக்குத் தெரிவித்திருக்கலாமன்ரே?

(தொடரும்)

சித்திரை இதழின் தொடர்ச்சி :

நாலுற்பது

வித்துவான். எஸ். நடராசன்,
தலைமைத் தமிழாசிரியர், டி. இ. எல். சி. உயர்நிலைப்பள்ளி, புதுக்கோட்டை

2. இனியவை நாற்பது

இந்நூல் நாலுற்பதில் இரண்டாவதாகும். இது கடவுள் வாழ்த்துடன் 41 செய்யுட்களை யுடையது. இன்னிசை வெண் பாவினால் அமையப்பெற்றது. செய்யுள் தோறும் மூன்று அல்லது நான்கு கருத்துக்களை எடுத்து இயம்புகின்றது. மக்கள் வாழ்க்கையில் நன்மையுறும் கருத்துக்களை எடுத்து இனிது என்று தலைப்பிட்டுக் கூறுவதால் இந்நூல் 'இனி யவை நாற்பது' எனப்பட்டது. இது பொருளும் எண்ணும் ஏற்றுப் பெயருற்றது எனலாம். இந்நூலை 'இனிது நாற்பது', 'இனியது நாற்பது' என்றும் வழங்குவர், இனிய எளிய நடை அமைப்புடையது.

இந்நூலின் ஆசிரியர் பூதஞ்சேந்தனர் எனப்படுகிருர். இவரை மதுரைத் தமிழாசிரியர் மகனர் பூதஞ்சேந்தனர் என வழங்கியதாகவும் காணப்படுகிறது. இதனல் இவர் இயற்பெயர் சேந்தனர் என்பதும், இவரது தந்தை பூதன் என்பதும் அறியப்படுகிறது.

இவரது நாடு பாண்டி நாடு என்பது 'மதுரைத் தமிழா சிரியர் மகனர்' என்பதனல் தெளிவாகிறது. இவர் தந்தை தமிழாசிரியர் என்பதும் அதனல் இவரும் சிறந்த தமிழாசிரி யராக இருந்திருக்கலாம் என்பதும் ஒருவாறு அறிய ஏது வாகிறது.

சமய நிலை :

கடவுள் வாழ்த்தின் முதலில் சிவனைப்பாடி யுள்ளதால் இவரைச் சைவர் என்பார். ஆனல் இவர் சிவன், திருமால், பிரமன் முதலிய மூவரையும் குறிப்பிடுவதால் சர்வ சமயக் கொள்கையினர் என்பதே ஏற்றது. எல்லா மதத்திடத்தும் பொதுத்தன்மை கொண்டுள்ளதால் இவரை வைதிக சமயத் தினர் எனலாம்.

காலம் :

இவர் இன்ன நாற்பது போலவே கடவுள் வாழ்த்து அமைத்து இருப்பதாலும், மக்கள் வாழ்க்கைக்கு இன்னதை வற்றைத் தொகுத்த கபிலர் 'இன்னநாற்பது' அமைத்ததைப் போல இவரும் இனியவற்றைத் தொகுத்து 'இனியவை நாற்

பது' என இயற்றியிருப்பதும், பிரமன் வாழ்த்தைக் குறிப் பிட்டிருப்பதாலும், இன்ன நாற்பதின் பல கருத்துக்களை அப் படியே எடுத்தாண்டிருப்பதாலும், இன்னா நாற்பதை அடுத்த காலப் பகுதியே இவருடையது எனலாம். அதனால் இவரது காலம் கி. பி. 725-750 எனக் கொள்ளுதல் ஏற்புடைத்து. இன்னும் 'கணக்காயர்' என்று கடைச்சங்கம் கூறி வந்த ஆசிரியர்க்குள்ள பெயரை நீக்கி புத்தம்புதிய முறையில் 'தமி ழாசிரியர்' என்று வழங்க வழிகோலியதே இது கடைச்சங்கத் திற்கும் பிற்பட்ட கால மென்பதை வலியுறுத்தும்.

வடமொழியும் அதன் வழக்க ஒழுக்கங்களும் மிகப்பரவிய காலத்தில் இந்நூல் எழுந்தது என்பதை எவரும் மறுக்கார், எடுத்துக்காட்டாக 'கடன் பெற்றுய்தல், கடன் பெற்று செய் தன செய்தல்', 'பெண்களை விடமென நினைத்தல் முதலிய கருத்துக்களை நோக்க உண்மை புலனாகும். இவ் காலத்தில் வழங்கிய வழக்குகளையும், தன் பட்டறிவையும், முன்னோர் கருத்துக்களையும் கொண்டு யாத்துள்ளார். இதனால் இவர் வாழ்ந்தகாலம் கி. பி, எட்டாம் நூற்றாண்டின் முற்பகுதி என் பதை வலியுறுத்தலாகிறது.

இந்நூல் இன்னா நாற்பதை அடுத்துத் தோன்றியது என்றோம். அதன் கருத்துக்கள் பல இதன் கண் அமைந் துள்ளன. எடுத்துக்கூட்டாக; ஊனைத்தின்று 'ஊனைப்பெருக் காமை முன்னின்னா' என்பது 'ஊனைத்தின்று ஊனைப் பெருக் காமை முன்னினிதே' என்றும், 'குழவிகள் உற்ற பிணி இன்னா' என்பது 'குழவி பிணியின்றி வாழ்தல் இனிதே' என்றும்; 'கல்லார் உரைக்கும் கருமப் பொருள் இன்னா' என்பது, 'கற்றறிந்தார் கூறும் கருமப்பொருள் இனிதே' என்றும், 'பிறன் மனையாள் பின்னோக்கும் பேதையின்னா' என்றது 'பிறன்மனை பின்னோக்காப் பீடு இனிது' என்பன வற்றால் அறிக.

இந்நூலின் கருத்துக்கள் யாவும் தொடர்ந்தன அல்ல. நீதிகளையும் மக்கள் இயல்புகளையும் எடுத்துக்கூறிச் செல் கின்றன. பதினெண் கீழ்க்கணக்கு நூல்களில் கடவுள் வாழ்த் துப்பெற்ற நூல்களில் இதுவும் ஒன்று. வீர சோழிய உரையா சிரியரால் எடுத்துச் சிறப்புப் பெற்றுள்ளது. சங்க இலக்கி யங்களின் கருத்துக்களையும் திருக்குறள் முதலியவற்றின் கருத்துக்களையும் பொன்னேபோல் போற்றித் தன் நூலினை அழகு செய்துள்ள பான்மை அறிந்தின் புறத்தக்கது.

3. கார் நாற்பது

இந்நூல் நாலுற்பது என்ற தொகை நூலில் மூன்றாவ தாக உள்ளது. நாற்பது செய்யுட்களைப் பெற்றது. இது

பதினெண் கீழ்க்கணக்கில் கடவுள் வாழ்த்துப் பெருதவை களில் ஒன்று இன்னிசை,, நேரிசை வெண்பாக்களால் யாத்துளது. கார் காலத்தின் இயல்புகளைக்கொண்டு அகப் பொருட்சுவை ததும்பப் பாடப்பட்டுள்ளது. 'இந்நூல் காலமும் எண்ணும் பெற்று நூற்குப் பெயராயிற்று என்க.

இந்நூலின் ஆசிரியர் மதுரைக் கண்ணங்கூத்தனர் என்பதால், இவர் பெயர் கூத்தனர் என்பதும், கண்ணனர் மகனர் என்பதும் தெரியவருகிறது.

இவரது நாடு பாண்டி நாடு என்பது 'மதுரைக் கண்ணங் கூத்தனர்' என்பதால் அறியப்படுகின்றது.

சமயநிலை :

முதற் செய்யுளில் 'பொருகடல் வண்ணன்' என்று திருமாலைப் பாடியிருப்பதாலும், பின்னர் 'நாஞ்சில் வளவன்'—(19) என்று பலராமனைக் குறிப்பிடுவதாலும் இவரை வைணவ மதத்தினர் என்பர். ஆனல் சிவனுக்குரிய கார்த்திகை தீபம் முதலிவைபற்றிக் கூறுவதால் இவர் சர்வசமயக் கொள்கையினர் எனக்கொண்டு வைதீக சமயம்' எனல் ஏற்றதாகும்.

காலம் :

இன்ன நாற்பது, இனியவை நாற்பதுக்கு அடுத்தும் களவழி நாற்பதுக்கு முன்னும் வைத்திருக்கும் வைப்பு முறையை நோக்க இவரது காலத்தை அமைக்கலாமேயன்றி, வேறு வகை காண இயலவில்லை. அதனல் இவரது காலம் கி. பி. 750-775–க்கும் இடைப்பட்ட காலமெனவே சால்புடைத்து.

இந்நூல் அகத்தில் முல்லைத்திணையின் பாற்பட்டது. முல்லைத்திணைக்குரிய கார் காலத்தை அடிப்படையாகக் கொண்டு இயற்றப்பட்டது. முல்லையாவது இருத்தலும் இருத்தல் நிமித்தமும் ஆகும். அஃதாவது, தலைமகன் யாதேனும் ஒரு காரணம் பற்றிப்பிரிய, தலைவி அவன் வரும்வரை ஆற்றியிருக்கும் நிலையைக்குறிப்பதாகும். அதுபோது தலைவன் இன்ன காலை வருவேன் என்று கூறிச்செல்வதும், குறித்த காலம் வந்தும், அவன் வாராது காலம் கடப்பானேயானல், அது போழ்து தலைவி ஆற்றாமை மிக்கு வருந்தும் தன்மையும் அது காரணமாக அவளது கற்பின் அருமையும், அன்பின் பெருமையும் வெளிப்பட புலவர் அமைத்துக் கூறுவர்.

இந்நூலின்கண் 'கார் காலத்து வருவேன்' என்று தலைமகன் கூறிச் சென்றானாக; கார் காலம் வந்தும் அவன் வாராமையினால் அவள் ஆற்றுவதும், அவளைத் தோழி முதலியவர்கள் ஆற்றுவிக்கும் அருமைகளையும் சுருங்கச் சொல்லி விளங்கவைக்கும் திறம் போற்றற்குரியது. ஒவ்வொரு செய்யுளிலும் கார்காலத்தின் தன்மைகள் அழகாக எடுத்துக் கூறப்பட்டுள்ளன. இந்நூலில் முல்லைத் திணைக்குரிய முதல், கரு உரிப் பொருள்கள் தெளிவாகக் கூறப்பட்டுள்ளன. முதற் செய்யுளிலேயே முல்லைத் திணைக்குரிய கடவுளாகிய திருமாலை அமைத்துப் பாடப்பட்டிருப்பது ஒன்றே இவ்வாசிரியரின் பெருமை இனிது வெளிப்பட ஏதுவாக நிற்கிறது.

இந்நூலின் உள்ள உவமைகள் ஒவ்வொன்றும் உள்ளத்திற்கு உவகை ஊட்டக்கூடியன. சங்கச் செய்யுட்களைப் படித்து இன்புறுதல்போல், புது மெருகு அளிக்கப்பட்டு உள்ளத்திற்கு விருந்தளிக்கிறது. பழமை நிகழ்ச்சிகளான வேள்வித் தீ, கார்த்திகைவிளக்கு முதலியவற்றையும், இயற்கைக் காட்சிகள் பலவற்றையும் எடுத்துக் கூறி இன்பத்துள் ஆழ்த்துகின்றார். எடுத்துக்காட்டாக 'குருந்தின் குவியிணர் உள்நிறை ஆகத்து இருந்(து) இன் இளி வண்டுபாட, இருந்தும்பி இன் குழல் ஊதும்' என்ற அடிகள் படித்துப்படித்து இன்புறத்தக்கன. மேகத்தின் செயல்கள் யாவும் ஆங்காங்கே படம் பிடித்துக் காட்டப்பட்டுள்ளன. இன்னும் கூறவேண்டுமெனில் நாற்பது செய்யுளும் நாவிற்கும் மனத்திற்கும் இன்பம் நல்கும் அமிழ்தம் என்றால் அது தவறாகாது. இந்நூலின் அருமைபெருமைகளை அறிந்த வீர சோழிய உரைகாரர் எடுத்தாண்டு சிறப்புச் செய்துள்ளார்.

4. களவழி நாற்பது.

இந்நூல் நாற்பதில் இறுதியிலுடையதாகும். இது 41 செய்யுட்களைக் கொண்டு விளங்கியது. ஆனால், தற்போது புறத்திரட்டில் ஒரு செய்யுள் கிடைக்கப் பெற்றது. ஆக 42 செய்யுட்கள் இதனில் இடம் பெற்றுள்ளன. இதுவும் பதினென் கீழ்க்கணக்கில் கடவுள் வாழ்த்து அமையப் பெறாத நூலினுள் ஒன்றாகும். இன்னிசை நேரிசை, பஃறொடை வெண்பாக்களால் இயற்றப் பெற்றுள்ளது. இதன்கண் இரு செய்யுட்கள் இடைச் செருகலோ என்று நோக்கும்போது 8, 32 இலக்கமுள்ள பாடல்கள் முத்தொள்ளாயிரப் பாடலாகயிருக்கலாம் எனத் தோன்றுகின்றன. அறிஞர்கள் ஆய்ந்து கூறின் நலம் பயக்கும். இந்நூல் இளம்பூரணர், வீர சோழியம் (நன்னூல்) மயிலைநாதர் முதலியோரால் எடுத்தாளப்பட்டுச் சிறப்புற்று நிற்கிறது. இடமும் எண்ணும் ஏற்று நூற்பெயர் அமைந்துள்ளது.

(தொடரும்)

சென்ற இதழின் தொடர்ச்சி:

அறிவன் கோயில்

வித்துவான் சி. கோவிந்தராசனுர்,
தமிழ் விரிவுரையாளர், கரந்தைப் புலவர் கல்லூரி, தஞ்சை.
(உரிமை ஆசிரியருக்கு)

ஏழடிப்பட்டம்:

சிற்றண்ணல் வாயில் மலையில் தவநெறிகொண்டு வாழ்ந்த, புத்த சமணத் துறவிகள் வாழ்ந்த குகைக்குச் செல்லும் அரிய வழியின் தலைப்பே இவ்வஞ்சத்தக்கப் பகுதியாகும்.

மலையின் உடற்பகுதிக்குரிய கிழக்கு விலாப்புறம் செங்குத்தாக அமைந்துள்ளது. இப்பகுதியில் தரைமட்டத்திற்கு இருநூறடி உயர அளவில் திறந்த வாய் போன்ற பெரிய குகையொன்று இயற்கையாகவே அமைந்துள்ளது. இக் குகைக்குச் செல்லும் வழி மலையின் மேற்றளத்திலிருந்து கிழக்கு விலாப்புறமாகவே சரிந்து செல்லுகிறது. இப் பாதையின் தலைப்பை அடைய மலையின் தென்கோடி இறக்க வழியாக ஏறிச் செல்லுதலே நேர் வழியாகும்.

மலையின் மேற்றளத்திலிருந்து தொடங்கும் இவ்வழி முதலில் பத்தடி அளவில் சற்று செங்குத்தாகச் சரிந்த நிலையில் இறங்குகிறது. பின்னர் சரிவிலமைந்துள்ள சிறிய ஒட்டுப் பாதை தொடருகின்றது. இப்பகுதியை உளத்திட்பமுடையாரன்றிப் பிறர் கடப்பதற்கில்லை. இத்தகைய வழியை அக்காலத்தில் இலகுவில் கடந்து வந்த துறவிகள் சரிவில் அடி வைத்துச் செல்லுவதற்கு இலக்காக அடிச்சுவடுகள் போன்ற ஏழு குழிவுகளைப் பாறையில் குழித்து வைத்திருக்கின்றனர் இவ்வேழு அடிகளைக் கொண்டு இப்பகுதியைக் கடந்துவிடின் பாதை சற்று அகலமாக அமைந்துள்ளது. இப்பகுதியைக் கடக்க உதவும் ஏழு அடிச்சுவடுகள் இங்கு உள்ளமையாலேயே இப்பகுதியை 'ஏழடிப் பட்டம்' என்று மக்கள் அழைக்கின்றனர்.

(1941-ஆம் ஆண்டில் யான் முதன் முறையாக இப்பகுதியைக் கடக்கும்போது கைப்பிடிக் கம்பியளவில் ஆதரவு செய்யப் பெற்றிருந்தது. பின்னர், யாவரும் இலகுவில் சென்று குகையைக் காண வேண்டுமென்று விரும்பியவர்களால் படிகள் அமைக்கப்பட்டன. அதனல் பழமை ஓரளவு தன்னிலையை இழந்ததாயினும் இரண்டொரு அடிச்சுவடுகள் உருக்குலைந்த நிலையில் இன்றும் நின்று காட்சியளிக்கின்றன.)

அடிச்சுவடுகளின் வழியாகச் செல்லுங்கால் பாறைகளை ஒருபுறம் தழுவியே செல்லுதல் வேண்டும். தவறிவிடின் அடிவாரத்தில் அமைந்து கிடக்கும் பாறைக் குவியல்களின் மேல் வீழ்ந்து நொறுங்குவதைத் தவிர உய்வதற்கு வழியே இல்லை. கடியதும் துன்பம் நிறைந்ததுமான இவ்வழியினையே இங்கு வாழ்ந்த துறவிகள் எளிதில் கடந்து தங்கள் உறைவிடமான குகையை அடைந்திருக்கிறார்கள். இந்நிலையைச் சிந்தித்தால் புத்த சமணத் துறவிகள் மேற்கொண்டொழுகிய மிகக் கடுமையான தவவொழுக்கத்திற்கு, இவ்வழி ஒரு எடுத்துக்காட்டாக அமைந்திலங்குவது புலனாகும்.

துறவிகள் இருக்கை :

ஏழடிப் பட்டத்தினைக் கடந்த பின்னர் பாதை நான்கடி அகலச் சரிவாகவே பதினைந்து அடிக்குமேல் செல்லுகிறது. அங்கிருந்து தொடரும் பாதை துன்பமின்றிச் செல்லுவதற்கு உதவியாக உள்ளது. (இங்கு, இப்பொழுது இரும்புக் கதவு அமைக்கப்பட்டுள்ளது.) இவ்விடத்தினின்றும் சிறிது மேல் நோக்கி உயரும் பாதையைத் தொடர்ந்து, தெற்கு வடக்காகவும் நெடிதாகவும் அமைந்துள்ள குகைப் பகுதி தொடங்குகிறது. இதுவே வரலாற்றுப் புகழ்பெற்ற 'சமணர் குகை' என்று இப்பொழுது கூறப்படும் துறவிகள் இருக்கை.



சமணர் குகையோடுகூடிய மலைப் பகுதியின் தோற்றம்
1, ஏழடிப்பட்டம். 2. குகையில் கற்படுக்கைகள் உள்ள இடம்.
3. காவல் பள்ளி.

குகையின் தலைப்பில் அமைந்துள்ள சுவர்போன்ற பாறைகளுள் சில, பிளவுபட்டு நீண்ட திண்ணைகளைப்போல் அமைந்

திருக்கின்றன. இத்திண்ணைப் பாறைகளின் மீது சிறிய அளவுள்ள கற்படுக்கைகளும் வட்டக் குழிவுகளும் அமைக்கப்பட்டிருக்கின்றன. வட்டக் குழிவுகள் அமைக்கப்பட்டதன் உண்மை புலனாகவில்லை.

குகையின் முன்புறத் தோற்றம் அன்னப்பறவையின் திறந்த அலகினைப்போல் காணப்படுகின்றது, குகையின் உதட்டுயரம் சராசரி ஆறடியாயினும், உட்குழிந்து நெடிதாகச் செல்லும் அதன் பெரும்பாலான பகுதியானது ஒருவன் உட்காரக் கூடிய இடைவெளி அமைப்பாகவே பரந்துள்ளது. இக்குழிவுப் பகுதியை அடுத்துள்ளதும் குகையின் வடக்குப் பகுதியுமான பாறைத்தளமே கற்படுக்கைகள் உள்ள சிறந்த பகுதியாகும். இப்பகுதியிற்றான் துறவிகள் பயன்படுத்திய கற்படுக்கைகள் பலவுள்ளன. அவற்றுள் சில சிதைவடைந்திருப்பினும் பதினான்கு படுக்கைகள் பார்வைக்கு நன்றாக அமைந்துள்ளன.

கற்படுக்கைகள் குகையின் அடித்தளமான பாறையில் இரண்டு அல்லது மூன்று விரல் அளவில் உட்குழித்து பாயலைப் போன்று மிகவும் நீண்ட சதுரத்தில் அமைந்திருப்பதுடன் வழவழப்பாகவும் செப்பனிடப்பட்டுள்ளன. சில படுக்கைகட்குத் தலையணை போன்ற சிறிது உயரமான பகுதிகளும் உண்டு. ஒரு மனிதன் தனித்துப் படுத்திருப்பதற்கு எவ்வகையிலும் பொருந்துமாறு இப்படுக்கைகள் அமைக்கப்பட்டுள்ளன. வாழ்க்கையில் வெறுப்புற்றவர், தீராத நோயினால் துன்புறுபவர், மிக்க மூப்படைந்தவர் ஆகியோர் இப் படுக்கையின் உண்ணா நோன்பிருந்து உயிர்துறக்கலாமென்பது துறவிகளின் கொள்கை என்பர். இதனைச் 'சல்லேகனை' (வடக்கிருத்தல்) என்றும் சமண நூல்கள் கூறும்.

சமணர் குகையின் நெடிய தோற்றம். அம்புக்குறி கற்படுக்கைகளைக் காட்டுகின்றது.

ஒரு படுக்கை மிகவும் பெரிய அளவில் கவர்ச்சியான தோற்றத்தில் தெற்கு வடக்காக அமைக்கப்பட்டுள்ளது இப் படுக்கையின் ஓரப்பட்டைகளிலேயே பிராமி எழுத்துக்களா லான கல்வெட்டுத் தொடர் உள்ளது. இதற்கு இடப்புறமாக மற்றொரு சிறிய கற்படுக்கையும் சேர்ந்தாற்போல் காணப்படு கின்றது. எஞ்சியவைகள் இவற்றினும் சிறியவைகளேயாம். இப்படுக்கைகளின் தலைப்புக்களில் கி. பி. ஒன்பதாம் நூற்றாண் டளவில் வழங்கிவந்த தமிழ் வட்டெழுத்துச் சார்புடைய எழுத்துக்களால் அவ்வப் படுக்கைகட்குரிய துறவிகளின் பெயர்கள் பொறிக்கப்பட்டுள்ளன. பிராமி எழுத்துக்கள். கி. மு. இரண்டாம் நூற்றாண்டைச் சேர்ந்தவை. தமிழ் எழுத்துக்கள். கி. பி. ஒன்பதாம் நூற்றாண்டைச் சேர்ந்தவை.

குகையின் தரைபோன்ற மட்டப் பகுதியோடு மேலே கூரையாக உள்ள பாறையிலும் ஆங்காங்கு சிறு சிறு குழிவுகள் நேருக்கு நேர் தோண்டப்பட்டுள்ளன. அக்குழிகளில் பொருந்துமாறு நிறுத்தப்பட்ட சிறு தூண்களோடு பிணைக்கப் பட்ட அடைப்புகளால் கற்படுக்கைகள் கொண்ட பல அறை களாகவும் அப்பகுதி தடுக்கப்பட்டிருந்ததென்பதைச் சூழ் நிலையாலும் அடையாளங்களாலும் அறிய முடிகின்றது.

குகையின் விதானம் போன்று அமைந்துள்ள பாறை முழு வதும் சுண்ணச் சாந்து பூசப்பெற்று சிறந்த ஓவியங்களால் அழகு செய்யப்பெற்றிருந்தனை மலர்ந்த தாமரை மலரின், தோற்றமுடன் மயங்கும் நிலையிலுள்ள ஓவியப் பகுதியொன்று இன்றளவு நின்று உணர்த்துகின்றது. எஞ்சியவை காலத் தாலும் அறிவிலிகளாலும் காணுதொழிந்தன போலும்!

விதானப் பாறையின் முனை உட்குவிந்து உதடுபோன்று குகையின் அமைப்பிற்கேற்ப நீண்டு அமைந்துள்ளது. இவ் விளிம்பின் வழியாக மலைமீது பொழியும் மழைநீர் வழிந்தோடி குகையின் தளம் முழுவதையும் நனைத்து விடும். அவ்வாறு ஒழுக்கு ஏற்படின் மாரிக்காலம் முழுவதும் இக்குகை வாழ்க் கைக்குப் பயனற்றதாகிவிடும். எனவெ, மழைநீர் அவ்வாறு வழிந்தோடி வாராமல், பற்றுக்கோடின்றி அமைந்துள்ள அப் பாறை விளிம்பு முழுவதும் தொடர்ந்த சாளரவரம்பு வெட்டப் பட்டுள்ளது. சிற்பிகள் அரிதில் முயன்று அக்காலத்தில் செய்துள்ள இக் கைத்திறனைக் காணின் வியப்பாகவுளது!

கற்படுக்கைக் கல்வெட்டுகள் :

குகையிலுள்ள பெரிய கற்படுக்கையில், "இவ்வதிட்டா னம் ஓய்மா நாட்டுக் குமட்டூர் பிறந்த காவிதி ஈதனுக்கு சித்து போசில் இளையர் செய்தமைத்தது." என்று திருத்தமுறும்

தொடர் பிராமி மொழியில் வெட்டப்பட்டுள்ளது. இத்தொடரைக்கொண்டு, இன்று திண்டிவனம் என்றழைக்கப்படும் ஊரைச் சார்ந்த பகுதியாகப் பல்லவர் காலத்தில் விளங்கிய ஒய்மா நாட்டிலுள்ள குமட்டூரில் பிறந்து, பல்லவ அரசியலதிகாரியாக இருந்து, காவிதி என்ற விருதுப் பெயரும் பெற்ற ஈதன் (ஈசன்) என்பவன், அஞ்சினன் புகலிடமாகவோ அன்றி முதுமையடைந்த நிலையிலோ இங்குத் துறவறம் மேற்கொள்ள வந்தபோது சித்துபோசில் என்று கூறப்பெற்ற இக்குகையில் வாழ்ந்த சமணச் சாரண இளைஞர் அவனுக்குக் கற்படுக்கை செய்தமைத்துதவிய வரலாற்றுடன், இப்படுக்கையோடு இணைவாகவுள்ள சிறிய படுக்கையைக் கொண்டு அவ்வதிகாரியின்பால் மிக்க அன்புகொண்டொழுகிய ஊழியர் உடனிருந்த செயலையும் ஒருவாறு அறிந்துகொள்ள முடிகின்றது.

அசோகன் காலத்து (பிராமி) எழுத்துக்கள்-கி.மு.3 முதல்-கி.பி.4 வரை



பெரிய கற்படுக்கையில், பிராமி எழுத்திலுள்ள கல்வெட்டு

மற்றைய கற்படுக்கைகளில் காணப்படும் தமிழ் கல்லெழுத்துக்களைக் கொண்டு, தொழக் குன்றத்துக் கடவுளன் திருநீலன், திருப்பூரணன், திருச்சாத்தன், ஸ்ரீ பூரண சந்திரன், நியத்தகரன், பட்டக்காழி, என்னும் சமணப் பெரியார்கள் அங்கு வாழ்ந்தமை தெரிகின்றது. இச்சமணப் பெரியார்களின் பழைய வரலாற்றை சுருக்கமாக அறிந்து கொள்ளுதல் நன்றாம்.

தென்னாட்டில் சமயங்கள் :

கிறித்து பிறப்பதற்கு ஐந்து நூற்றாண்டுகட்கு முன்னர், வட இந்தியாவில் சிறப்புடன் உருப்பெற்றுத் திகழ்ந்த சமயங்கள் பௌத்தம் சமணம் ஆகிய இரண்டுமேயாகும். இக்காலத்தில் பௌத்த சமயம் புத்தரால் தோற்றுவிக்கப் பட்டது. சமண சமயம் இதற்கு முன்னர் மிகப்பழைய காலத்திலிருந்தே தொடர்ந்து வந்ததாயினும் முறையாக வந்த சமயத் தலைவர்களாகும். தீர்த்தங்கரர்கள் வரிசையில் இருபத்து நான்காம் தீர்த்தங்கரர் என்று சமண நூல்கள் கூறும் மகாவீர வர்த்தமானராலேயே முழுவடிவில் விளங்கலாயிற்று. இவ்விரண்டு மதங்களும் கல்வி, கலை, தொண்டு

உண்மைத்துறவு ஆகியவற்றால் மக்களுடைய ஆதரவைப் பெற்று மிக்க விரைவில் தழைத்தோங்கி இந்து சமயப் பரப்பைக் குறைக்கலாயின. கி. பி. மூன்றாம் நூற்றாண்டில் பேரரசன் அசோகனால் பெருமையுடன் பேணப்பட்ட பௌத்த சமயம் அவ்வரசனாணையால் கிழக்காசியா முழுவதும் பரவத் தொடங்கியது. சமண சமயமும் பெருவாரியான இந்து மன்னர்களுடைய ஆதரவைப்பெற்று மக்களிடையே வளர்வதாயிற்று. எனவே, சிறப்புடன் வடநாட்டில் பெருகி நின்ற இந்து சமயமாம் ஓடையை மூடிநிற்கும் தாமரையும் ஆம்பலும் போன்று இரு சமயங்களும் படர்ந்து செழித்து மலர்ந்து நின்றன.

இவ்வாறு, அரசர்களாலும் மக்களாலும் மதிக்கப்பெற்ற பௌத்த சமண சமய வளர்ச்சியில் கி. பி. இரண்டாம் நூற்றாண்டளவினதாக இந்து சமயம் நிலையற்றுக் கிடந்தது. பின்னர் ஆரியமன்னர் வழியில் தோன்றிய வாகட மன்னர்களது ஆர்வத்தால் வடநாட்டில் இந்து சமயம் புதிய வேகம் கொண்டது ஆற்றுப் போக்கிற்கேற்ப சாய்ந்து நிற்கும் நாணல் தொகுதிகளைப் போல அரசன் வழியையே மக்களும் பின்பற்றினர். அதன் விளைவாக பௌத்த துறவிகளும் சமண திகம்பரர்களும் ஆதரவற்ற நிலையை அடையலாயினர். செல்வாக்குடன் வாழ்ந்த பௌத்த சமணத் துறவிகளின் வாழ்க்கை சீர்குலையத் தொடங்கியது, நிலைகெட்டு வாழ மனமில்லாத அவர்கள் அங்கிருந்தும் தக்காணத்தில் புகுவாராயினர். தாம் மேற்கொண்டொழுகிய தவத்திற்கும் அமைதிக்கும் கலைவளர்ச்சிக்கும் இலக்கான காடு மலைகளை நாடிய துறவிகளில் சிலர், எல்லோரா அஜந்தாக் குன்றுகளில் அமைந்த இயற்கைக் குகைகளில் வாழ்வாராயினர். நாளடைவில் அக்குகைகளை வாழ்வதற்கேற்பப் பெரிய தாக்கிக் கொண்டனர். சிற்ப ஓவிய வல்லுநராக விளங்கிய துறவிகள் ஆங்குப் பள்ளிகளையும் பாழிகளையும் சமய இலச்சினையாக அமைத்து வருவாராயினர்.

சமண பௌத்த சமயங்கள் பிறந்த இடத்தினின்றும் பெருமையின்றிப் பிரிந்து செல்லுவதற்குக் காரணமான வாகட மன்னரைத் தொடர்ந்தே குப்த மன்னர்கள் தோன்றினர். அவர்களுடைய ஆட்சிக்காலமாகிய கி.பி. ஐந்தாம் நூற்றாண்டு முடிவாக ஆரிய சமயம் வெகு விரைவாக மறுமலர்ச்சி கொள்ளத் தலைப்பட்டது. இந்நிலையில் ஹர்ஷ மன்னனின் காலத்தில் பௌத்த சமயம் புது மெருகுடன் தளிர்க்கலாயிற்று. அதைச் சார்ந்தே சமண சமயமும் உயிர்ப்புடன் எழுந்தது. அக்காலத்தில், மேலும் தென்னாட்டில் பரவத்

சாரத்தின் சாரம்

சாலை இளந்திரையன், எம். ஏ., எம், லிட்.,

வாழ்க்கை ஒழுக்க நியதிகளை வலியுறுத்தும் பிற்கால நீதி நூல்களுள் ஒன்று "அறநெறிச் சாரம்". இருநூற் றிருபத்தாறு வெண்பாக்களைக் கொண்ட இந்நூலை இயற்றிய வர் முனைப்பாடியார் என்னும் பெரியார். இந்நூலில் சமண சமய ஒழுக்க விதிகள் மிகுதியாக எடுத்தோதப் பட்டிருப் பினும் பொதுவான ஒழுக்க உரைகளும் இடம் பெற்றுள்ளன. அவ்வுரைகளே, சமய எல்லைக்கு அப்பால் முனைப்பாடியாரின் புகழைப் பரப்பியுள்ளன.

"அறநெறிச் சாரம்" என்னும் பெயரே, அது ஒழுக்க விதிகளின் பிழிவு என்பதைப் புலப்படுத்துகின்றது. நாம் அப்பிழிவையும் பிழிந்து, சிற்சில உயர் பொதுக் கருத்துக்களை மட்டும் காண்போம்.

எந்த ஒரு பொருளைப் பற்றியும் தெளிவான, திட்டமான கருத்துக்கொள்ளுவதற்கு வள்ளுவம் கூறும் வழி,

---

தொடங்கிய அவ்விரு மதங்களும் சமணமதம் சளுக்கியருடைய ஆட்சிப் பகுதிகளிலும், மைசூர் நாட்டிலும், தமிழகத்திலும் ஆங்காங்கு இடம் பெற்றது. இங்கிலையிற்றான் பல்லவருடைய ஆட்சியின் ஒரு பகுதி சமணரின் சுவடாக அமையலாயிற்று,

இவ்வாறு பௌத்த சமண சமயங்கள் தென்னிந்தியாவில் புகுந்து பரவிய கி. பி. மூன்று முதல் ஆறும் நூற்றாண்டளவின தான காலப்பகுதியின் தமிழக வரலாறு நிழலடைந்து காணப் படுதலினால் தெளிந்து கூற வாய்ப்பின்றிய நிலையிலுள்ளது.

பொதுவாக தென்னிந்தியாவில் கி. பி. ஐந்தாம் நூற்றாண்டளவில் சைவ வைண சமயங்கள் சிறப்பாகவும் பிற சமயங்கள் ஆங்காங்கு பரவியும் நிலவி வந்தன எனலாம். கி. பி. ஆறும் நூற்றாண்டின் பிற்பகுதியில் ஆண்ட பல்லவ மன்னனான சிம்ம விஷ்ணு வைணவத்தை வளர்த்தவனாவன். இம்பேரரசனுடைய மகனும், இவனுக்குப் பின்னர்ப் பட்ட மெய்தி ஏழாம் நூற்றாண்டின் முற்பகுதியைச் சிறப்பித்தவனு மாகிய முதலாம் மகேந்திர வர்ம பல்லவன், முதலில் சமண னாகவும், பிறகு சைவனாகவும் மாறி சமயச் சார்பில் சிற்ப ஓவியக்கலைகளை வளர்த்த பெற்றியைத் தென்னாடெங்கும் உள்ள சிற்பங்களாலும், குகைக் கோயில்களாலும், கற்றளி களாலும், கல்வெட்டுக்களாலும் நன்கறியலாம்.

(தொடரும்)

"குணம்நாடிக் குற்றமும் நாடி அவற்றுள்
மிகைநாடி மிக்க கொளல்"

என்பது. இந்த ஆய்வு எப்படி அமைய வேண்டும் என்பதை எடுத்துரைக்கிறார் முனைப்பாடியார். அறிவுடையோர் எதனையும் விருப்பு வெறுப்பு இன்றி ஆராய்வார்கள்: ஆராய வேண்டும். ஏனெனில் அதன்பால் விருப்புக் கொண்டு ஆராயின் அதனிடத்தே உள்ள குற்றம் புலப்படாது; வெருப்புக் கொண்டு ஆர்ராயின் அதனிடத்தே உள்ள சிறப்பு புலப் படாது:

"காய்தல் உவத்தல் அகற்றி ஒருபொருட்கண்
ஆய்தல் அறிவுடையார்க் கண்ணதே—காய்வதன்கண்
உற்ற குணம்தோன்றா தாகும்; உவப்பதன்கண்
குற்றமும் தோன்றாக் கெடும்"

அறிவு, ஆராய்ச்சி அரசச் செங்கோல் போன்றது. அதில் பற்றுப் பரிவுகளுக்கோ காழ்ப்புகளுக்கோ இடமில்லை. எளிதில் விருப்பு வெறுப்புக்களில் சாயாத மனநிலை வாய்க்கப் பெற்றவராலேயே மெய்ம்மை உணரவும் உணர்த்தவும் இயலும் என்னும் செய்தியை நல்குகின்றது இப்பாடல்.

நாம் குடியாட்சி முறை பெருகிவரும் காலத்தில் வாழ்கிறோம். இம்முறையில் உள்ள சிறப்புக்களைப் போலவே குறைகளும் உள்ளன. பெரும்பான்மை வாக்குக்களாலேயே எதையும் முடிவு செய்யும் முறை சிலபோது வேண்டாத செயலையும் செய்து விடுவதையும் வேண்டிய ஒன்றையும் தள்ளி விடுவதையும் பார்க்கிறோம். ஆட்சிமன்ற உறுப்பினர் தேர்தலில் இதனைக் கண்கூடாகக் காண முடியும். ஆயினும் பெரும்பான்மையோர் அளித்த தீர்ப்பை ஏற்றுக் கொள்ளவே வேண்டியதிருக்கிறது. இதேபோல் யாதாயினும் ஒன்றைப் பற்றிப் 'பலர் ஒரே கருத்துத் தெரிவித்துவிட்டால், அது சரியாகத்தான் இருக்கும்' என்று எண்ணுகிற மனப்பான்மை எப்போதும் இருந்து வருகிறது. எதையும் ஆய்ந்தோய்ந்து பார்த்தே ஏற்க வேண்டும் என்னும் பெருமக்களால் இப் பொதுத் தீர்ப்பை எப்போதும் ஏற்க முடிவதில்லை. ஆகையினால் அவர்கள் 'ஏதொன்றும் தீர விசாரித்துச் செய்' என்று அறிவுறுத்துகின்றார்கள். பொதுக் குரலை அப்படியே ஏற்கும் குணத்தை நயமாக இடித்துரைக்கிறார் முனைப்பாடியார்:

"உடங்கமிழ்தம் கொண்டான் ஒருவன், பலரும்
விடங்கண்டு, நன்றிதுவேஎன்றால், மடங்கொண்டு
பல்லவர் கண்டதுநன்று என்று அமிழ்துஒழிய
நல்லவனும் உண்ணுமோ நஞ்சு?"

உலகில் இன்று வரையில் ஆய்ந்து காண்பார் சிலராகவும் யாரோ சொன்னதற்கு 'ஆமாம்' சொல்வோர் பலராகவுமே

இருந்து வந்துள்ளனர். உடல் உழைப்பில்லாமல் சிலர் நல் வாழ்வு வாழ்கின்றார்கள் என்ற குற்றச்சாட்டு உலகில் உள்ளது. ஆயினும் அறிவு உழைப்பு இல்லாதவர், தம் அறிவால் எதையும் எண்ணிப் பாராதவர் மிகப்பலராகவே இருந்து வருகின்றனர் என்பதையும் நாம் மறப்பதற்கில்லை. ஆகையினால் அவர்களின் தீர்ப்பை எப்போதும் (பெரும்பான்மை என்பதற்காக) நம்பி ஏற்க இயலாது. பெரும்பான்மையோர் சொல்லி விட்டதனாலேயே நல்லது தீயதாகவும் தீயது நல்லதாகவும் மாறி விடுவதில்லை. ஆகையால், எல்லோரும் சொல்லுகிறார்கள். அது சரியாகத்தானே இருக்கும் என்று எதையும் கண்மூடிப் பின்பற்றலாகாது என்பதே அறிஞர் பெருமக்களின் எச்சரிக்கை.

"தற்புகழ்ச்சி கூடாது" என்பதைச் செயலாக்க இயலாவிட்டாலும், கருத்தளவில் யாவரும் ஏற்றுக்கொள்ளுகின்றார்கள். இலக்கணமே கூட,

> "தோன்று தோற்றித் துறைபல முடிப்பினும்
> தான்தற் புகழ்தல் தகுதி அன்றே"

என்று விதிக்கிறது.

தற்புகழ்ச்சியில் ஈடுபட்டுக் கிடப்போர் ஒன்றை இழக்கின்றார்கள்; அதுதான் அறிவு. ஒன்றைப் பெறுகின்றார்கள்; அதுதான் இழிவு. பலவற்றைத் தெரிந்துகொள்ளத் தெரிந்து கொள்ள அறிவு விரிவடைகின்றது. "நமக்குத்தான் தெரியும்; பிறருக்கு ஒன்றும் தெரியாது" என்னும் எண்ணத்தால்தான் தற்புகழ்ச்சி பிறக்கிறது. அதுவே பிறரிடமிருந்து நமக்கு அறிவு கிடைக்காதபடி செய்து விடுகின்றது. பிறருக்குத் தெரியாது என்ற கருத்திலேயே நாம் செயல்படுவதனால் நம் எண்ணம், மொழி செயல்களில் கவனக் குறைவு ஏற்பட்டு நமக்கே இழிவும் தேடித் தருகிறது.

> "பலகற்றோம் யாம் என்று தற்புகழ வேண்டா,
> அலர்கதிர் ஞாயிற்றைக் கைக்குடையும் காக்கும்.
> சிலகற்றார் கண்ணும் உளவாம், பலகற்றார்க்கு
> அச்சாணி அன்னதோர் சொல்."

உலகுக்கெல்லாம் ஒளிதரும் சூரியனைக்கூட ஒரு குறிப்பிட்ட இடத்தில் வெயில் வீசாதபடித் தடுக்கும் ஆற்றல் ஒரு சிறிய குடைக்கு இருக்கிறது. இதுபோலவே பல கற்றார்க்கும் ஏற்படக் கூடும். சில கற்ற ஒருவருக்குத் தெரிந்த செய்தி பல கற்றவர்க்குத் தெரியாமலும் இருக்கக் கூடும். "கற்றது கைம் மண்ணளவு, கல்லாதது உலகளவு" அல்லவா? இதை உணர்ந்து, "வாழ்க்கையின் எத்துறையிலும் என்றைக்கும்

நாம் மாணவரே" என்று எண்ணம் கொண்டால் தவறும் நிலை ஏற்படாது; பலவற்றைத் தெரிந்து உயரும் வாய்ப்பும் கிட்டும்.

உலகவாழ்க்கை நெறியாகிய 'அறம்' பற்றி முனைப்பாடியார் கூறும் கருத்துக்கள் மிகமிகப் பண்பட்ட சிந்தனையின் மலர்ச்சியாகக் காண்கின்றன. வாழ்க்கை நெறிகள் இல்லறம் துறவறம் என இரண்டு வகைப்படும். மிகப் பழைய தமிழ் வாழ்வு இவ்விரண்டு நெறிகளையும் ஒன்றாக இணைத்து வைத்திருந்தது. அதாவது, இல்லற நெறியில் வாழ்ந்து வயதும் அனுபவமும் முதிர்ந்த நிலையில் துறவு மனப்பான்மையோடு (இல்லறத்திலேயே) வாழவேண்டும் என்பதே தமிழரின் வாழ்க்கைக் கோட்பாடு, நாளடைவில் ஏற்பட்ட நாகரிகக் கலப்புக்களாலும் சமூகச் சூழ்நிலைகளாலும் இந்த வாழ்க்கை நெறி மாறியது. இல்லறம் செய்வோர் ஒரு சாராரும் துறவறம் காப்பார் வேறொரு சாராருமாக மக்கள் வாழ்க்கையை மேற்கொண்டனர். இந்த நிலையில், இல்லறம் சிறந்ததா? துறவறம் சிறந்ததா? என்னும் வினா எழுந்தது. திருவள்ளுவர் போன்ற பெருமக்கள்,

"அறனெனப் பட்டதே இல்வாழ்க்கை; அஃதும்
பிறன்பழிப்ப தில்லாயின் நன்று."

என்று விடை தந்தனர். முனைப்பாடியாரும் அதனையே ஏற்று,

"வினைகாத்து, வந்த விருந்தோம்பி நின்றால்
மனைவாழ்க்கை நன்று, தவத்தின்."

என்று கூறியுள்ளார். அந்த இல்லறம் எப்படி அமைந்தால் சிறக்கும் என்பதையும் அவர் விளக்குகிறார்:

"மருவிய காதல் மனையாளும் தானும்
இருவராய்ப் பூண்டு ஈர்ப்பின் அல்லால், -ஒருவரால்
இல்வாழ்க்கை என்னும் இயல்புடைய வான்சகடம்
செல்லாது, தெற்றிற்று நின்று"

இரண்டு காளைகள் சேர்ந்து இழுக்கவேண்டிய வண்டியில் ஒரு காளையை மட்டும் பூட்டினால் வண்டி இயங்காது; புறப்பட்ட இடத்திலேயே திரும்பி நின்று விடும். இக்காலம் ஆணுக்கும் பெண்ணுக்கும் சம உரிமை கேட்கின்றது. நமது முன்னவர்கள் இருவருக்கும் சமப் பொறுப்புரிமை வழங்கினார்கள்; வழங்குவது இன்றியமையாதது என்றும் கருதியிருந்தார்கள்.

இருவராய்ப் பூண்டு ஈர்க்கும் சகடத்தின் பாதிப் பொறுப்புடைய பெண் எப்படி இருக்கவேண்டும்?

"மடப்பதுஉம் மக்கள் பெறுவதுஉம்; பெண்பால்
முடிப்பதூஉம் எல்லாரும் செய்வர்.-படைத்ததனுல்
இட்டுஉண்டு இல்வாழ்க்கை புரிந்துதாம் நல்லறத்தே
நிற்பாரே பெண்டிர்என் பார்."

இயல்பாயமைந்த உடல் தோற்றத்தாலும், பெண்பாலார்க்கே உள்ள சில கடமைகளாலும் ஒருத்தி சிறந்த மனைவியாகி விடுவதில்லை. தன் கணவனோடு இல்லறத்திற்குரிய உயர் கடமைகளை நிறைவேற்றுபவளே சிறந்த இல்லக் கிழத்தியாவாள்.

இவ்வாறெல்லாம் இல்லறத்தின் சிறப்பும் இயல்பும் எடுத்துரைத்த முனைப்பாடியார் துறவறத்தையும் மறந்து விடவில்லை. அது மட்டுமன்று; இரண்டு நெறிகளும் ஒன்றற்கொன்று துணையாக ஓங்கும் ஒரு பொதுநிலையையும் விரும்பி வற்புறுத்தியுள்ளார் :

"நோற்பவர் இல்லவர்க்குச் சார்வாகி, இல்லவரும்
நோற்பவர்க்குச் சார்வாய் அறம்பெருக்கி-யாப்புடைக்
காழும் கிடுகும்போல் நிற்கும், கயக்கின்றி
ஆழிசூழ் வையத்து அறம்"

ஒன்றுக்கொன்று முரண்பட வேண்டா. 'அவை இரண்டும் ஒன்றை ஒன்று ஏந்தி ஏற்றிச் செழித்தால் உலகவாழ்வு உயரும். இரண்டு நெறிகள் தோன்றித் தனித்தனியே வளர்ந்து விட்டபின், ஒன்றைத் தாழ்த்தியும் மற்றதை உயர்த்தியும் கட்சி பேசுவதால் எப்பயனும் விளையாது. இரண்டும் இணைந்து செயல்படத் தூண்டுவதன் மூலமே சிறந்த பயனை அடைய முடியும். அப்பெரிய உண்மையை நன்கு தெளிந்த முனைப்பாடியார் ஈரறங்களையும் ஓரறமாக வளர்க்கும் முயற்சிக்கு வித்தூன்றியுள்ளார்.

உண்டு உறங்கி வறிதே வாணாளைக் கழிப்பது உயிரோடு இருப்பது ஆகும், அது வாழ்க்கை ஆகாது. அதனை வாழ்க்கை என்று எண்ணுவது, ஒன்றுமில்லாத வெறும் பெட்டியைப் பூட்டிப் பூட்டி வைத்து மகிழ்வது போன்றதாகும். உயர்நெறியில் செயலாற்றி, கிடைத்த நாளைப் பயன் நாளாக்குவதே வாழ்க்கை என்னும் பெயர் பெறும்;

"அறஞ்செய்து வாழ்வதே வாழ்க்கை; மற்றெல்லாம்
வெறும்பேழை தாழ்க்கொளீஇ அற்று."

இப்பெரு வாழ்வு அவ்வளவு எளிதில் அமைந்து விடுதவில்லை. கல்வியும் அறிவும் அவற்றால் விளையும் ஞானத்தெளிவுமே அவ்வாழ்வை அடையும் நல்ல நெறியைக்காட்ட முடியும். இருள்தான் உலகில் இயற்கை; அந்த இருளை நீக்கும் முயற்சியே வாழ்க்கை. அம் முயற்சிக்குத் துணை நிற்பது கல்வியும் அதனல் பெறும் அறிவுமே.

"இருளே உலகத்து இயற்கை; இருள்அகற்றும்
கைவிளக்கே கற்ற அறிவுடைமை"

அறிவினால்தான் பல மயக்க நிலைகளை அகற்றி மெய்ம்மை நிலைகளைத் தெரிந்துகொள்ள இயலும். அறிவுத் தெளிவில்லாதவனே பிறர்க்குத் துன்பம் செய்கிறான். அத்துன்பம் பிறருக்குச் செய்யப்பட்டதன்று; தானே தனக்குச் செய்துகொள்ளும் துன்பம் என்பதை அவன் உணர்வதில்லை.

"பிறர்க்கு இன்னா செய்தலின் பேதமை இல்லை.
பிறர்க்குஇன்னா என்றுபேர் இட்டு தனக்குஇன்னா
வித்தி விளைத்து வினைவிளைப்பக் காண்டலின்
பித்தும் உளவோ பிற?"

பிறர்க்குச் செய்த அத்துன்பம் அதன் பயனைத் தனக்கு காட்டியே தீரும், எனவே அத்துன்பம் தனக்குத்தான் துன்பத்தைப் பயிரிட்டு விளைவித்துக் கொள்ளும் செயலேயாகும். அறிவுத் தெளிவிருந்தால் மனிதன் இப்படிச் செய்யமாட்டானல்லவா?

உலகம் சொல்லின் வழிச்செல்லுவது, இன்பத்தையும் துன்பத்தையும் விளைவிக்கும் ஆற்றல் பெற்றது சொல். ஆகையினால் அதனை அளவோடு பேச வேண்டும் என்று நீதிகளெல்லாம் விதிக்கின்றன. இனிய சொல் இன்பம் தரும்; இன்னாச் சொல் துன்பம் தரும். அது மட்டுமன்று; கேட்போர் நெஞ்சில் மாறாத் தழும்பையும் ஏற்படுத்தி விடும். "ஆறாதே நாவினால் சுட்டவடு" என்பது வள்ளுவம்.

சொல்லுக்கு இத்தனை பெரிய ஆற்றல் இருப்பினும் அதன் தன்மை உணர்ந்து அதனைப் பயன்படுத்துவோர் மிகச் சிலரே. சொல்லின் வகை தெரிந்து கையாள்வது மிகப்பெரிய கலை. அதற்குத் தெளிந்த அறிவும் அசையாத திடமும் வேண்டும். அவை யாவர்க்கும் எளிதாக அமைந்து விடுவதில்லை. ஆகையினால் பெரியோரெல்லாம் சான்றோர்களையும் தேர்ந்த அறிவாளர்களையுமே எச்சரித்து வருகின்றார்கள் "நீங்கள் நல்ல சொற்களையே சொல்லுங்கள். அதே சமயம் பிறர் சொல்லும் தீய சொற்களைப் பொறுத்துக் கொள்ளுங்கள்" என்பதே நீதி நூல் வகுத்த மேதைகள் அனைவரின் ஒருமித்த வேண்டுகோளாக இருந்து வருகிறது.

விநாடிதோறும் பயன்படுத்தத் தக்கதாக எளிதில் கிடைக்கும் கருவி சொல். அதனை யாவரும் பயன் படுத்துகின்றனர். ஆதலால் அதனால் மிகு தொல்லைகள் ஏற்படுவதும் இயல்பே. அதைக் கருதித்தான் வாயுள்ள எல்லாரையும் தடுப்பதைவிட அறிவுள்ள சிலரை எச்சரிப்பதால் பயன் விளையும் என்று பெருமக்கள் கருதினார்கள் போலும்.

"உண்ணாது நோற்பார் பெரியர்; பிறர்சொல்லும்
இன்னாச்சொல் நோற்பாரிற் பின்"

என்று இசைக்கிறது வள்ளுவம். உண்ணா நோன்பு மேற்கொள்வோர் பெரியவர்களே. ஆயினும் பிறர் சொல்லும் தீச்சொற்களைப் பொறுத்துக்கொள்ளும் அறிவுத் தெளிவு பெற்றவர்கள் அப்பெரியவர்களையும் விடப் பெரியவர்கள். அறிவில்லாதவர்கள் சொல்லும் கொடுஞ் சொற்களைப் பொறுத்துக்கொள்வதே வலிமையுள்ளெல்லாம் சிறந்த வலிமை என்றும் கூறுகின்றது வள்ளுவம்.

பிறர்சொல்லும் கொடுஞ்சொல்லைப் பொறுத்துக் கொள்ளுதலாகிய தவமே உலகில் தலைசிறந்த தவம் என்கிறார் முனைப்பாடியார்.

"எள்ளிப் பிறருரைக்கும் இன்னாச்சொல் தன்நெஞ்சில்
கொள்ளிவைத் தாற்போல் கொடிதெனினும் மெள்ள
அறிவென்னும் நீரால் அவித்துஒழுகல் ஆற்றின்
பிறிதுஎனினும் வேண்டா தவம்."

பொறுமையினும் சிறந்த தவம் வேறு இல்லை. பொறுத்தார்க்குப் பொன்றும் துணையும் புகழ் அல்லவா? ஒருவர் வெகுண்டு உரைக்கும் இன்னாச்சொல்லைப் பொறுத்துக்கொள்ளுவதனால் அவரது வெகுளி மேலும் ஓங்க வழியில்லாது தணிகிறது. "ஒருவர் பொறை இருவர் நட்பு" என்பது பழமொழி. இப்பொறுமையால் நட்பு ஏற்பட்டாலும் ஏற்படாவிட்டாலும் பகைமை வளராதொழிகிறதல்லவா? அறிவுத் தெளிவுக்கு அதுவே பெரிய வெற்றியாயிற்றே.

நமக்கு நாம் செய்து கொள்ளக்கூடிய சிறப்புக்களில் மிகப் பெரியது நல்ல நட்பு ஒன்றே என்பது வள்ளுவரின் கருத்து. முனைப்பாடியார் நாம் செய்து கொள்ளக்கூடிய பெரியநட்பு அறம் ஒன்றே என்று வரையறுக்கின்றார். அதற்கு உரிய காரணங்களையும் விளக்குகிறார்:

"தனக்குத் துணையாகி, தன்னை விளக்கி,
இனத்துள் இறைமையும் செய்து, மனக்கினிய
போகம் தருதலால், பொன்னே. அறத்துணையோடு
ஏகமாம் நண்புஒன்றும் இல்."

அறம் சார்ந்த வாழ்வினால் ஏற்படுத்த இத்தனை பயன்களும் உயர்ந்த நட்பினால் மட்டும்தான் ஏற்படக்கூடும். ஆகையால் ஊரில் நண்பர் தேடி அலைவதைவிட அறநெறியோடு நட்புச் செய்து கொள்வது, அறநெறி பிறழாமல் வாழ்க்கை நடத்துவது சிறப்பல்லவா?

(தொடரும்)

யோகாசனம்

த. இராமநாத பிள்ளை B. A. (யாழ்ப்பாணம்)

தமிழ்ப் பொழில் சார்வாரி பங்குனி இதழில் யோகாசனம் என்னும் கட்டுரை யோகத்தைப் பற்றிய என் கருத்துக்கள் சிலவற்றை மறுக்கின்றதாகலின், என் கருத்துக்களைச் சிறிது விளக்க விரும்புகின்றேன். கட்டுரை எழுதிய புலவர் அவர்களுடைய கல்வியை யான் பாராட்டுகின்றேன். எனினும் அவர்களுடைய கருதல் சில இழுக்குடையன.

பத்திரம் கோமுகம் முதலிய ஆசனங்கள் மிகப் பல என்பதைக் காட்டுதற்கே அத்திருமந்திரத்தை எடுத்துக் காட்டினேன். திருமூல நாயனார் அவற்றில் பயில வேண்டிய அவசியமில்லை என விளம்பினரென யான் கூறினேன் அல்லேன். அட்டாங்க யோகம் செய்வதற்கு ஆசனங்கள் துணை புரியும் என்பது நாயனார் கருத்து. 551-ம் மந்திரம் அக் கருத்தை யான் மறுக்கின்றிலேன். உடற்பயிற்சிகள் மனவொடுக்கத்துக்குத் துணைபுரியும் என்பது உள நூலார் கொள்கை. இது நிற்க.

திருமூல நாயனார் எல்லா ஆசனங்களிலும் பயில வேண்டுமெனக் கூறினர் அல்லர். யாதேனும் ஓர் ஆசனம் பயின்று யோகம் செய்யலாம். அட்டாங்க யோகந்தான் ஒரேயொரு யோகமென எண்ணற்க. யோகம் என்பது கூடுதல். முதல்வனை அடைதற்குப் பல வழிகள் உண்டு. அவை எல்லாம் யோகம் எனப்படும். அவற்றுள் அட்டாங்க யோகமும் ஒன்று. அட்டாங்க யோக மல்லாத வழிகளால் முதல்வனை அடைய விரும்புவோர்க்கு ஆசனப் பயிற்சி அவசிய மில்லை.

இனி ஆசனங்களில் பயின்றால் முதல்வனை அடையலாம் என்பது புலவர் கருத்து. எண்ணிலா ஆசனம் பயின்றாலும் தியாநம் கை கூடாமல் இருக்கலாம் என நாயனார் நவில்கின்றனர்.

> "எண்ணா யிரத்தாண்டு யோகம் இருக்கினும்
> கண்ணார் முதிலைக் கண்டறி வாரில்லை
> உண்ணாடி யுள்ளே ஒளிபெற நோக்கினாற்
> கண்ணாடி போலக் கலந்து நின்றானே.

திருமந்திரம்—603

ஆசனங்கள் பல கூறினர். ஆகையால் அவற்றைப் பயில வேண்டுமென்பது பிழை. அட்டமாசித்திகளை நாயனார் கூறினர், ஆகையால் அவற்றை யாம் பயில வேண்டும் என்பர்

போலும். மாரணம் முதலியவை பற்றிப் பல மாந்திரிகப் பாடல்கள் நாயனார் இசைத்தனர்; ஆகையால் அவற்றைப் பயின்று யாம் மக்களை மாரணம் செய்ய வேண்டும் என்பர் போலும். இது நிற்க.

கரும யோகம், பக்தி யோகம், ஞான யோகம் என்னும் வழிகளில் செல்வோர் ஆசனங்களில் பயில வேண்டுமென நாயனார் சொன்னார் அல்லர். சுவாமி விவேகானந்தரும் சொல்லவில்லை. ஆகலான் நாயனார் கருத்தும் என் கருத்தும் முரண்படவில்லை என்பது மலையிலக்கு.

முதல்வனை அடைதற்குத் தேகப்பயிற்சியிலும் பார்க்க இயமம் நியமம் அவசியம் என்பதை யான் வற்புறுத்தினேன். அங்ஙனம் கூறுங் காலைப் புலன்வழிச் செல்லாமை யோகத்திற்கு இன்றியமையாததென்பதைக் கூறினேன் ஒழிய அட்டாங்க யோகம் செய்ய வேண்டுமென யான் உரைக்கவில்லை. புலன்வழிச் செல்வோர் யோகாசனப் பயிற்சிகள் யாவற்றையும் செய்தாலும் முதல்வனை அறியார் என் உரைக்கின்றேன். ஆசனப்பயிற்சி அவசியமில்லை எனவும் ஆசனப் பயிற்சியிலும் பிராணயாமம் முக்கியமானதெனவும் மறைமலையடிகள் இனிது விளக்கியுள்ளனர். யாதேனும் வசதியான ஓர் ஆசனத்திலிருந்து பிராணயாமம் செய்யலாம் என்பது மறைமலையடிகளின் கூற்று.

இனி யோகாசனப் பயிற்சிக்கும் உடற்பயிற்சிக்கும் வேற்றுமை பெரிதென்பர் புலவர். புலன் வழிச் செல்லாதோர் யோகாசனப் பயிற்சி செய்தாலும் உடற்பயிற்சி செய்தாலும் வேற்றுமை இல்லாத ஒரு தன்மையான பயனை அடைவர் என்பது என் துணிபு. உடற்பயிற்சி போல் யோகாசனப் பயிற்சியும்—இயமம் நியமம் இல்லாக்கால்—ஒழுக்கத்தை மேனிலையடையச் செய்கின்ற உளப்பயிற்சி யாதென்பதைக் கடைப்பிடிப்போமாக. ஆகலின் அட்டாங்க யோகம் செய்யாதாரும் இயமம் நியமம் என்னும் ஒழுக்கங்களைக் கையாளுதல் விரும்பப்படும்.

நோய் நீக்கத்துக்கு மருந்தினும் யோகாசனப் பயிற்சி சிறந்ததென்பது புலவர் கருத்து. அதை யான் ஏற்கவில்லை. சித்தவைத்தியம் நீரிழிவு எலும்புருக்கி நோய் முதலியவற்றை நீக்கி மக்களைச் சுக தேகிகளாக்குதலையும் யோகாசனங்களில் பயின்று இல்லாத நோய்களை வருவித்துச் சிலர் துன்புற்று இறந்தனர் என்பதையும் என் சிறிய அநுபவத்தில் அறிந்துள்ளேன்.

———